அலகு 14

# இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

## கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- இரண்டாம் உலகப்போருக்கான காரணங்கள், அதன் போக்கு மற்றும் விளைவுகள்
- சீனப் புரட்சி
- இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்சில் உருவான தேசியவாத இயக்கங்களும் சுதந்திரத்திற்கான போராட்டங்களும்

E3C2F3

## அறிமுகம்

முதல் உலகப்போருக்குப் பின் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட பன்னாட்டு அமைப்பு தகர்ந்தது. 1939 செப்டம்பரில் ஐரோப்பா, மீண்டும் ஒரு பெரும் போரை எதிர்கொண்டது. 1939 முதல் 1945 வரை நடந்த போர், இதற்குமுன் 1914 முதல் 1918 வரை நடந்த உலகப்போரை விஞ்சியதாக இருந்தது. இதற்கு ஜப்பான் எடுத்த நிலைப்பாடும் முக்கியக் காரணங்களில் ஒன்றாகும். அதன் விளைவாக கடுமையான அளவிற்கு உயிரிழப்பும், பொருள் சேதமும், போர்செலவினங்களும் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் காலனிய நாடுகளில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு தேசியவாத கிளர்ச்சிகள் சூடுபிடித்தன. இதனால் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் காலனியாதிக்க நீக்கம் தொடங்கியது. தென்கிழக்கு ஆசியாவில், டச்சு ஒரு தோல்வியுற்ற போரை நடத்தியது, ஆனால் இறுதியாக முந்தைய டச்சு காலனி நாடாக இருந்த கிழக்கிந்தியத் தீவுகளான இந்தோனேசியாவுக்கு 1949இல் விடுதலை அறிவிக்கப்பட்டது. இப்பாடம் இந்தோனேசியாவிலும், அமெரிக்க காலனியான பிலிப்பைன்ஸ் நாட்டிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களை அணுகுபொருளாக எடுத்துவிளக்குகிறது. சீனாவில் ஊழல்வாதிகளும், திறமையற்றவர்களுமாக இருந்த தேசியவாதிகளை மக்கள் புறந்தள்ளினார்கள். அங்கு நடந்த உள்நாட்டுப் போரின் விளைவாக மா சே–துங்கின் தலைமையில் சீன மக்கள் குடியரசு உருவாக வழிவகுத்தது.

## 14.1 இரண்டாம் உலகப்போர்: காரணங்கள்

போரின் துவக்கத்தில் பிரிட்டனும், பிரான்சும் ஜெர்மனியை எதிர்த்ததும் இத்தாலி துவக்கத்தில் நடுநிலைவகித்து பின் ஜெர்மனியை ஆதரித்ததும் கொடுத்த தோற்றமானது முதல் உலகப்போரின் இரு அணிகளை நினைவூட்டக்கூடியதாக விளங்கியது. குறிப்பிடத்தக்க வேறுபாடு என்னவென்றால், ஜப்பான் மேற்கத்திய சக்திகளுக்குப் பதிலாக ஜெர்மனியுடன் இணைந்தது. போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடக்கும் வரை ரஷ்யாவும், அமெரிக்கா ஐக்கிய நாடும் எந்த ஒரு பிரச்சனையிலும் தலையிடவில்லை. இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர்முறைகள் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தன. அகழியை அடிப்படை உத்தியாக கொண்ட போர்முறை மறைந்து வான்வெளி குண்டு வீசும் முறை ஆக்கிரமித்தது. போருக்காக ஆயுதம் ஏந்தியோரையும், சாதாரண குடிமக்களையும் இரண்டாம் உலகப்போர் பிரித்துப் பார்க்கத் தவறியது. அதனால் போரினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மிக அதிகமாகவே இருந்தது.

போர் மூள்வதற்கான சூழ்நிலைகளைப் பற்றி நாம் முதலில் அறிவோம்.

### அ) அமைதி உடன்படிக்கையின் நியாயமற்ற தன்மை

முதல் உலகப்போரின் முடிவில் ஜெர்மனியின் மீது பல கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.



12th_History_TM_Unit_14_V2.indd 124 24-09-2019 10:58:16

அதன் கட்டுப்பாட்டில் இருந்த காலனிய நாடுகள் பிரித்தெடுக்கப்பட்டதால் அதன் படையளவு மோசமாக சுருங்கியது. அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் விட்டுக் கொடுக்கவும், சார் பள்ளத்தாக்கில் அந்நாடு தற்காலிகமாகப் படைகளை நிறுத்திக் கொள்ளவும் ஜெர்மனி ஒப்புதல் வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டது. தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியாவை போலந்திடம் ஒப்படைக்கவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தப்பட்டது. மேலும் செலுத்தவே இயலாத ஒரு தொகையை (6,600 மில்லியன் பவுண்டுகள்) போர் இழப்பீடாகவும் ஜெர்மனியிடம் கோரப்பட்டது. இத்தகைய கூறுகள் தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்குள் எண்ண அலை ஏற்படவும் அதன் பின்தொடர்ச்சியாக நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கும் வழிவகுத்தது. இத்தாலியும் இத்தாலிய மக்கள் தொகையை அதிகமாகக் கொண்ட பகுதியாக கருதப்பட்ட டால்மேஷியாவை அதனிடமிருந்து பிரித்தெடுத்து புதிதாக உருவான யுகோஸ்லோவியாவிடம் ஒப்படைத்ததால் பாதிக்கப்பட்டிருந்தது. சிறு குடியரசாக மாற்றப்பட்ட ஆஸ்திரியா, ஜெர்மனியோடு இணைந்தால் பிரான்சு நாட்டிற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் அது ஜெர்மனியிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டது.

### (ஆ) பன்னாட்டு சங்கத்தின் (League of Nations) தோல்வி

மற்றொரு போரைத் தவிர்க்கும் நோக்கோடு பன்னாட்டு அமைப்பாக உருவாக்கப்பட்ட பன்னாட்டு சங்கம் காலப்போக்கில் வெற்றி பெற்றவர்களின் கூட்டணியானதோடு அது தோல்வியடைந்தவர்களுக்கு எதிரானதாகவும் தோன்றத் துவங்கியது. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் கையெழுத்தானபோதே அடுத்த போருக்கான விதைகள் தூவப்பட்டன.

1918 முதல் 1933 வரையிலான காலத்தில் போரைத் தவிர்க்கும் எண்ணத்தோடு தொடர் மாநாடுகள் நடத்தப்பட்டது. ஐரோப்பிய சக்திகள் 1925இல் ஸ்விஸ் நாட்டின் நகரான லோக்கர்னோவில் கூடி பேசியபோது ஜெர்மனியும் பிரான்சும் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தில் உள்ளபடி ரைன் எல்லையை மதித்து நடக்க ஒப்புக்கொண்டன. இதற்கு அடுத்ததாகப் பலவகையிலும் பாராட்டப்பட்டது 1928இல் கையெழுத்திடப்பட்ட கெல்லாக்–பிரையாண்ட் (Kellogg–Briand) ஒப்பந்தம் ஆகும். அக்காலகட்டத்தில் பன்னாட்டு சங்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு உறுப்பினராகவில்லை என்றபோதும் அது கூட்டத்தில் கலந்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின் விளைவாக உலக நாடுகள் அனைத்தும் 'போரை கைவிடுவது



கெல்லாக்–பிரையாண்ட் உடன்படிக்கை

என்பதை தங்களின் தேசிய கொள்கையாக' ஏற்க உறுதிமொழி எடுத்துக்கொண்டன. ஆனால் இவ்வுறுதிமொழியை பின்பற்றாத நாடுகள் மீது நடவடிக்கை எடுக்குமளவிற்கு பன்னாட்டு சங்கம் அதிகாரம் கொண்டிருக்கவில்லை.

ஹிட்லர் பதவியேற்ற 1933ஆம் ஆண்டு ஜெனீவாவில் பன்னாட்டு சங்கம் ஆயுதக்குறைப்பு மாநாடு ஒன்றை நடத்தியது. பிரான்சிற்கு இணையாக ஜெர்மனியும் மறுஆயுதமயமாக்கல் கோரிக்கை விடுத்ததே பிரச்சனையாக எழுந்தது. பிரெஞ்சுக்காரர்கள் இந்த கோரிக்கைக்கு உடன்பட மறுத்துவிட்டனர், அதே நேரத்தில் பிரிட்டன் ஜெர்மனியின் கோரிக்கையை ஏற்கத் தயாராக இருந்தது. பிரான்சின் மறுப்பிற்கு பதிலடியாக ஹிட்லர் அம்மாநாட்டிலிருந்தும், பன்னாட்டு சங்கத்திலிருந்தும் ஜெர்மனியை விலக்கிக் கொண்டார். தனது முடிவை பொது வாக்கெடுப்பிற்கு உட்படுத்திய ஹிட்லருக்கு சாதகமாக ஜெர்மானிய மக்களின் பெரும் ஆதரவு குவிந்தது. இதனால் ஊக்கமடைந்த ஹிட்லர் மார்ச், 1935இல் கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்தி அதன் வாயிலாக ஐந்து லட்சம் என்ற பெரும் அளவிலான எண்ணிக்கையில் இளைஞர்களைக் கொண்ட இராணுவத்தை உருவாக்கப் போவதாக அறிவித்தார். இந்நிகழ்வே வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் மீறப்பட்ட முதல் செயலாக அமைந்தது. பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள்



ஆயுதக் குறைப்பு மாநாடு, ஜெனீவா



12th_History_TM_Unit_14_V2.indd 125 24-09-2019 10:58:16

பன்னாட்டு சங்கத்தில் கூடி ஜெர்மனியின் போக்கைக் கண்டித்தனவேயன்றி வேறு எதுவும் செய்யமுடியவில்லை. பிரிட்டன் ஜெர்மனியோடு கப்பற்படை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முனைப்புக் காட்டியது. அதன்படி, பிரிட்டனின் கப்பற்படை கட்டுமானப் பணிகளில் 35 சதவீதம் வரை ஜெர்மனி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இத்தாலி எத்தியோப்பியா மீது 1935இல் படையெடுத்தது. பேரரசர் ஹேல் செலாஸி (Haile Selassie) பன்னாட்டு சங்கத்தில் முறையிட்டும் எந்தப் பயனும் இருக்கவில்லை.

### இ) 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்

இரண்டாம் உலகப்போர் துவங்க முக்கியமான பொருளாதார காரணம் பெருமந்தமே ஆகும். பெருமந்தம் பொருளாதார தேசியவுணர்வை அதிகப்படுத்தியது. வேலைவாய்ப்பின்மையாலும், தொழில் தேக்கத்தாலும் பாதிக்கப்பட்ட அரசுகள் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிக வரியைத் திணித்து அதன் வாயிலாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் நுகர்வையும் அதை சார்ந்த சந்தையையும் பாதுகாக்க முனைந்தன. இதன் விளைவாக, விரிவாக்க கொள்கைக்கு வழியேற்படுத்தியதோடு பிரச்சனையைத் தீர்க்க அண்டை நாடுகள் மீது படையெடுப்பதே தீர்வு என்ற நிலைக்கு கொண்டுசென்றது. இதன் முதல் நகர்வை ஜப்பானே மேற்கொண்டது. அது 1931இல் உலகப் பொருளாதார சிக்கலை எதிர்கொள்ள சீனாவில் மஞ்சூரியாவின் வடக்குப் பகுதிகளை ஆக்கிரமித்தது. ஜப்பானிய ஏற்றுமதியில் பட்டுத்துணிக்கான மூலப்பொருட்களும் பருத்தி ஆடைகளும் எதிர்கொண்ட சரிவை நிலைப்படுத்த மஞ்சூரியாவை ஆக்கிரமித்தால் அதை சந்தையாக மாற்றிக்கொள்ளலாம் என்று ஜப்பானிய இராணுவவாதிகள் அறிவுறுத்தியதால் அந்நாடு போர் நடவடிக்கையில் இறங்கியது.

### ஈ) ஜெர்மானிய பெரு வியாபாரிகளின் எதிர்பார்ப்பும், தேசப்பற்றாளர்களின் மனக்குறையும்

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் சோவியத் நாடு ஆகியவை உலகத்தின் பெரும் நிலப்பரப்புகளை தங்களின் காலனிகளாகக் கொண்டிருந்தன. ஐரோப்பிய கண்டத்தில் பெரும் தொழிற்தேசமான ஜெர்மனியோ காலனிகள் ஏதும் கொண்டிருக்கவில்லை. இதுவே ஜெர்மனியின் பெருவியாபார அமைப்புகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகளை உடைக்கத் தூண்டுவதாக அமைந்தது. ஜெர்மனி போலந்திடம் இழந்த பகுதிகளையும் ஜெர்மன் மொழி பேசும் ஆஸ்திரிய நாட்டையும் சூடட்டன்லாந்து என்ற செக் நாட்டு எல்லையில் அமைந்தபகுதிகளும் ஜெர்மனியோடு இணைத்துக்கொள்ள விரும்பியது. நாஜி ஆட்சியில் பெருவியாபார அமைப்புகளும், நாஜி கொள்கைகளும் இணக்கமானப் போக்கைக் கொண்டிருந்தன.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் சோவியத் நாடு ஆகியவற்றின் சாம்ராஜ்யம் பூமியின் நிலப்பரப்பில் நான்கில் ஒரு பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. ஒப்பீட்டளவில் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை சிறியனவாகவே தோன்றின. ஜெர்மானிய தேசபக்தி கொண்டோர் ஒரு ஜெர்மானியனின் வாழ்விடமாக சராசரியாக .004 சதுர மைல்களே உள்ளது என்பதையும், அதே வேளையில் சராசரியாக ஒரு பிரிட்டானியனால் ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட மூன்று சதுர மைல்களில் உள்ள வளங்களையும், பொருளாதார வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது என்பதனையும் சுட்டிக்காட்டினார்கள்.

### உ) முசோலினியின் விரிவாக்கக் கொள்கை

சோமாலிலாந்து, எரித்ரியா, லிபியா போன்ற நாடுகளை தன்னகத்தே வளைத்துக் கொண்ட முசோலினியின் இத்தாலி, எத்தியோப்பியாவை இணைக்கவும் அல்பேனியாவை யுகோஸ்லோவியாவிடம் இருந்து பிரித்தெடுக்கவும் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தது. இராணுவ அரசின் முதலாளித்துவமாக பொருளாதாரத்தை கட்டமைத்த அந்நாடு ஆயுதம் தாங்கிய விரிவாக்கத்தை ஆதரித்தது. ஆயுத தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களைப் பெறுவதற்கு இருந்த ஒரே வழி பிற நாடுகள் மீது படையெடுப்பதே என்ற நிலை இருந்தது.



முசோலினி மற்றும் ஹிட்லர்

முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பை பிரிட்டனும் பிரான்சும் கண்டித்ததால் ஹிட்லருக்கு இத்தாலியோடு



12th_History_TM_Unit_14_V2.indd 126 24-09-2019 10:58:16

நெருங்கிய நட்பை வளர்த்துக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இதுவே ரோம்–பெர்லின் அச்சின் துவக்கமாக அமைந்தது.

### ஊ) ஜப்பானின் ஏகாதிபத்திய கொள்கை

ஜெர்மனியின் அணுகுமுறையை கிழக்கு ஆசியாவில் ஜப்பான் பின்பற்றியது. அது ஏற்கனவே தைவானையும், கொரியாவையும் காலனிகளாக உருவாக்கிக் கொண்டதோடு மஞ்சூரியாவையும் கட்டுப்படுத்தியது. இராணுவம் ஆட்சியை கவிழ்த்து அரசை கைப்பற்றிய (1936க்குப் பின்) அதன் பேராசை நிறைந்த பார்வை டச்சு கிழக்கிந்தியப் பகுதிகள் மீதும், பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் கீழிருந்த மலேயா, சிங்கப்பூர் போன்ற பகுதிகள் மீதும், இந்தோ–சீனாவில் அமையப்பெற்ற பிரெஞ்சு காலனிகள் மீதும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வசமிருந்த பிலிப்பைன்ஸ் பகுதி மீதும் விழுந்தது.

### எ) போர் உருவாகுதலில் ஹிட்லரின் பொறுப்பு

#### (i) ஸார் பகுதியை ஜெர்மனியோடு இணைத்தது

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜனவரி 1935இல் ஸார் பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அப்பகுதி மக்கள் தாங்கள் ஜெர்மனியுடனோ, பிரான்சுடனோ அல்லது பன்னாட்டு சங்கத்தின் கட்டுப்பாட்டிலோ இருக்கப் போவதை அவர்களே முடிவுசெய்ய வேண்டும். வாக்களித்தவர்களில் தொன்னூறு சதவீத நபர்கள் ஜெர்மனியோடு இணைவதையே விரும்பினார்கள். அதனால் மார்ச் 1935இல் ஸார் பகுதி ஜெர்மனியோடு இணைக்கப்பட்டது. இது ஹிட்லருக்கு பெரும் மனவலிமையை ஊட்டியது.

#### (ii) ரைன்லாந்து இணைக்கப்படல்

வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் ஜெர்மனி தனது இராணுவத்தை ரைன்லாந்தில் இருந்து விலக்கிக்கொள்ள ஒப்புக்கொண்டதையும் மீறி 1936இல் ஹிட்லர் மீண்டும் அப்பகுதியில் இராணுவத்தை குவிக்கலானார். பிரெஞ்சுக்காரர்கள் கண்டித்திருந்தால் ஜெர்மானியர்கள் பின்வாங்கி இருக்கக்கூடும். பிரெஞ்சுப் படைபலம் ஜெர்மனியை காட்டிலும் வலுவாக இருந்தாலும் பொருளாதாரப் பெருமந்தம் ஏற்படுத்திய பாதிப்பும், அதனால் அரசியல் நிலையற்றத்தன்மையால் ஏற்பட்ட பாதிப்பால் பிரதம அமைச்சரான எடுவார்ட் டலாடியர் (Edouard Daladier) பதவி விலகுமளவிற்கு சென்றதாலும் பிரான்சினால் வெர்செய்ல்ஸ் ஒப்பந்த முறிவில் ஜெர்மனி ஈடுபட்டதை எதிர்க்க வலிமையற்று இருந்தது.



ஜெர்மனியின் ஆக்கிரமிப்பில் ரைன்லாந்து

#### (iii) ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு வலுக்கட்டாயப்படுத்தி இணைத்தது

ஹிட்லர் ஆஸ்திரியாவில் பிறந்ததால் அது ஜெர்மனியின் ஒருபகுதியாக இருப்பதையே அவர் விரும்பினார். ஹிட்லர் ஆஸ்திரிய பிரதம அமைச்சரான ஸ்கூஸ்னிக்கை (Schuschnigg) பிப்ரவரி 1938இல் பவேரிய ஆல்ப்ஸ் மலையில் இருந்த நகரான பெர்க்டஸ்காடனுக்கு (Berchtesgaden) கலந்துரையாடும் நிமித்தமாக அழைத்தார். அந்நிகழ்வில் ஆஸ்திரிய பிரதம அமைச்சர் நாஜி கட்சியை அவர் நாட்டில் அங்கீகாரமளிக்கவும் அந்நாட்டுப் பொருளாதாரத்தை ஜெர்மனியோடு இணைக்கவும் தவறினால் படையெடுப்பை எதிர்கொள்ள நேரிடும் என்ற ஒற்றை தெரிவு வழங்கப்பட்டு எச்சரிக்கை விடப்பட்டார். ரோம்–பெர்லின் அச்சின் உருவாக்கத்தோடு ஆஸ்திரியா இத்தாலியின் ஆதரவை இழந்திருந்தது. வேறு வழி தெரியாத ஸ்கூஸ்னிக் அந்த முதல் தெரிவை ஏற்றுக்கொள்ள உடன்பட்டார். ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால் இது குறித்துப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்போவதாக வெளியிடப்பட்டதனை புறந்தள்ளிய ஆஸ்திரிய பிரதம அமைச்சர், அந்நாட்டில் நாஜி அரசை ஏற்படுத்தினார். அதன்பின் ஜெர்மானிய படைகள் வியன்னாவிற்குள் நுழைந்து அந்நாட்டின் மீது கட்டுப்பாட்டை நிறுவ ஆரம்பித்தன.

#### (iv) சூடட்டன்லாந்து ஆக்கிரமிப்பு

ஐரோப்பாவின் முக்கிய சக்திகளிடமிருந்து எந்த எதிர்ப்பையும் எதிர்கொள்ளாத ஹிட்லர் தனது பார்வையை செக்கோஸ்லோவாக்கியா மீது திருப்பினார். ஜூன் 1938இல் ஹிட்லர் சூடட்டன்லாந்தை ஆக்கிரமிக்கும் தனது நோக்கை இராணுவத்திற்கு ஆணைகள் வாயிலாக தெரிவித்தார். சூடட்டன்லாந்தில்



12th_History_TM_Unit_14_V2.indd 127 24-09-2019 10:58:17

வாழும் ஜெர்மானியர்கள் மிக மோசமாக ஒடுக்கப்படுகிறார்கள் என்பது போன்றதொருப் பிரச்சாரத்தை தெளிந்த முறைமையுடன் நாஜி கட்சிப் பரப்பியது. பிரான்சையும், செக்கோஸ்லோவாக்கியாவையும் கலந்து பேசிய பிரிட்டிஷ் பிரதம அமைச்சர் நெவில் சாம்பர்லின், பாதிக்கு மேல் ஜெர்மானிய மக்கள் தொகையை உள்ளடக்கிய பகுதிகளை ஜெர்மனியிடம் ஒப்படைக்க இசைந்தார். ஆனால் போரை விரும்பிய ஹிட்லரோ அதை ஏற்க மறுத்தார். இது குறித்த பொதுவாக்கெடுப்பை நடத்துவதையும் அவர் விரும்பவில்லை. அதனால் அத்தகையப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னரே அவர் சூடட்டன்லாந்தை தனது இராணுவத்தை கொண்டு ஆக்கிரமித்தார்.

### மூனிச் ஒப்பந்தம்

லண்டனில் எழுந்தப் பெருவாரியான எண்ணவோட்டம் ஹிட்லருக்கு எதிரான போரை நாடியதாகவே இருந்தது. ஆனால் சாம்பர்லினும், பிரெஞ்சு பிரதம அமைச்சரும் 'சமரசப்படுத்தல்' (appeasement) என்ற கொள்கையை முன்னிறுத்தி எவ்வாறாயினும் அமைதியை நிலைநிறுத்த முயன்றனர். அதைத் தொடர்ந்து நடந்த மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்கள் கூடிப்பேசி ஹிட்லர் அக்டோபர் 1இல் நிர்ப்பந்தித்தது போல சூடட்டன்லாந்தை ஜெர்மானியப் படைகள் ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்றும் செக்கோஸ்லோவாக்கியாவின் பகுதிகளை போலந்திற்கும், ஹங்கேரிக்கும் பிரித்துக் கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.



மூனிச் ஒப்பந்தம்

### (V) செக்கோஸ்லோவாக்கியாவிற்கு எதிரான அத்துமீறிய தாக்குதல்

செக் நாட்டினர் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தார்கள். செக்கோஸ்லோவாக்கியாவின் புதிய எல்லைகள் மூனிச் மாநாட்டில் நான்கு சக்திகளால் உத்தரவாதம் அளிக்கப்பட்டன சாம்பர்லினின் கூற்றுப்படி இந்நகர்வு ஐரோப்பாவில் மிகப் பெரும் போரைத் தவிர்க்க உதவியதாகக் கருதப்பட வேண்டும். ஆனால் ஸ்லோவாக்கினருக்கும், செக் இன மக்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண் போக்கை காரணம்காட்டி ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவிற்குள் ஜெர்மானியப் படைகளை அனுப்பினார்.

### நாஜி–சோவியத் உடன்படிக்கை

பிரிட்டனும் பிரான்சும் போலந்து நாட்டிற்கு கொடுத்த நம்பிக்கை வாக்குறுதிகள் ரஷ்யாவின் உதவியில்லாமல் வலுவிழந்தவைகளாக கருதப்பட்டன. 1939இன் முன்கோடை காலத்தின் போது பிரிட்டனும் பிரான்சும் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தையைத் துவக்கலாயின. பரஸ்பர நம்பிக்கை இல்லாததாலும், ஜெர்மனியோடு ரஷ்யா போரில் ஈடுபட விரும்பாததாலும், பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ரஷ்யர்கள் தங்களது பகுதிகளுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் விரும்பினர். இவ்விரண்டையும் ஜெர்மனி உறுதிப்படுத்த முன் வந்ததால் ஆகஸ்ட் 1939இல் க்ரெம்ளின் நகரில் நாஜி–சோவியத் (ஆக்கிரமிப்பு தவிர்ப்பு) உடன்படிக்கை கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் இரகசிய சரத்துகளாவன: கிழக்கு ஐரோப்பாவை ஜெர்மனி–ரஷ்யாவின் செல்வாக்கிற்குட்பட்ட பகுதியாக கருதுவதும், போலந்தை பிரித்துக் கொள்வதும் என்பதாகும்.




நாஜி–சோவியத் ஒப்பந்தம்

### (vi) போலந்து மீது படையெடுப்பும், போரின் துவக்கமும்

ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டிருந்த ஹிட்லர் முதலில் 1939 செப்டம்பர் 1இல் போலந்து நாடு தனது நட்பு நாடுகளான பிரிட்டன் மற்றும் பிரான்சுடன் இணைந்து தன் நாட்டை சுற்றி வளைத்து தரைமட்டமாக்கத் திட்டம்



12th_History_TM_Unit_14_V2.indd 128 24-09-2019 10:58:17






12th_History_TM_Unit_14_V2.indd 129 24-09-2019 10:58:17

தீட்டுவதாகவும் போலந்தில் வாழும் ஜெர்மானிய இனத்தை அந்நாடு ஒடுக்குவதாகவும் குற்றம் சுமத்தி அந்நாட்டின் மீது படையெடுத்தார். இரண்டு நாட்களில் பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது: ஜெர்மானியப் படைகள் போலந்தில் இருந்து வெளியேறாவிட்டால், பிரிட்டனும் ஜெர்மனியும் போர்முனையில் சந்திக்க நேரும் என்பதேயாகும். பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கை புறந்தள்ளப்பட்டதால் இரண்டாம் உலகப்போர் மூண்டது.



ஹிட்லர்

## போரின் பல்வேறு நிலைகள்

### ஐரோப்பாவில் போர்

போர் துவங்கிய சில ஆண்டுகளில் ஜெர்மனி தடுத்து நிறுத்தமுடியாத சக்தியாக வடிவம் கொண்டிருந்தது. இரண்டே வாரங்களில் போலந்து தோற்கடிக்கப்பட்டது. மாஸ்கோவில் 1939 செப்டம்பரில் செய்துகொள்ளப்பட்ட இரண்டாவது ஒப்பந்தத்தின் வாயிலாக அந்நாட்டை சோவியத்தும் ஜெர்மனியும் பிரித்துக் கொண்டன. 1940 ஏப்ரலில் ஜெர்மனி நார்வே நாட்டை ஆக்கிரமித்தது. இவ்விணைப்பால் தனது நாட்டிற்கு ஸ்வீடனில் இருந்து இரும்புத்தாது வருவதை ஹிட்லர் உறுதி செய்து கொண்டதோடு பிரிட்டனை தாக்க வசதியாக கடற்படை தளத்தையும் விமானப்படை தளத்தையும் பெற்றுக்கொண்டார். தனது பிலிட்ஸ்க்ரீக் (Blitzkrieg என்னும் மின்னல் வேக வான்வெளி தாக்குதல்) தாக்குதல் முறையில் 1940 மே 10இல் நெதர்லாந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியம், மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் மீது ஜெர்மனி தாக்குதலைத் தொடுத்தது.

ஆறே வாரங்களில் அனைத்து நாடுகளும் தோற்கடிக்கப்பட்டு ஐரோப்பிய கண்ட நிலப்பரப்பில் இருந்து பிரிட்டன் வெளியேற்றப்பட்டது. ஏறக்குறைய 198,000 பிரிட்டிஷ் துருப்புகளும், 140,000 நேச நாடுகளின் துருப்புகளும் அதிலும் குறிப்பாக பிரெஞ்சு துருப்புகள் (1940 மே–ஜூனில்) டங்கிர்க் (Dunkirk) கடற்கரைக்கு கடும் துப்பாக்கி முழக்கங்களுக்கிடையே விரட்டப்பட்டு அங்கிருந்து படகுகளிலும், சிறு கப்பல்களிலும் புறப்படும்படியான நிலை ஏற்பட்டது. அவ்வாறு டங்கிர்க்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வீரர்களே நாட்டைவிட்டு அகன்று பாசிசவாதிகளுக்கு எதிராக பிரெஞ்சு அரசை நடத்திக் கொண்டிருந்த இராணுவ ஜெனரல் டி காலின் தலைமையிலான சுதந்திர பிரெஞ்சுப் படையின் கருவாக செயல்பட்டார்கள். டங்கிர்க் வெளியேற்ற




டங்கிர்க் வெளியேற்றம்

சம்பவம் நிகழ்ந்திருக்காவிட்டால் பிரிட்டனால் ஜெர்மனியின் நாசவேலை பாதிப்புகளுக்குட்பட்ட நாடுகளை மீண்டும் ஒன்று திரட்ட முடியாமலே போயிருக்கும்.

ஹிட்லரின் வெற்றியை கண்ட இத்தாலி ஜெர்மனியோடு இணைந்து 1940 ஜூனில் பிரான்ஸ் மீதும், செப்டம்பரில் எகிப்து மீதும் படையெடுத்தது. இச்சமயத்தில் ஜப்பானும் அச்சு நாடுகளோடு கைகோர்த்தது. பிரிட்டன் அமைதி நடவடிக்கையை முன்னெடுக்கும் என்று ஹிட்லர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் சாம்பர்லினைத் தொடர்ந்து பிரதம அமைச்சர் பதவிக்கு வந்த சர்ச்சில் சமரசம் ஏற்படுத்திக் கொள்ள மறுத்தார். சரணடைவதை வலியுறுத்த முனைந்த நடவடிக்கைகளாக ஜெர்மானிய விமானப்படை முன்தெரிவு செய்யப்பட்ட இலக்குகளான துறைமுகங்கள், விமானத்தளங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் போன்றவற்றின் மீது தாக்குதல் தொடுத்தது. 1940 செப்டம்பரில் லண்டன் மீது குண்டு வீசப்பட்டது, இந்நிகழ்வு பிலிட்ஸ் நடவடிக்கை (Operation Blitz) என்று அறியப்படுகிறது. லண்டன் மீதும், பிற தொழில் நகரங்கள் மீதும் 1940 அக்டோபரில் முதல் குண்டு வீச்சு தாக்குதல் என்பது வழக்கமான ஒன்றாக மாறிப்போனது. எனினும் ராடார் கருவியை கண்டுபிடித்தமையால் தூரத்தில் வரும் விமானங்களின் வழித்தடத்தை அறிந்த இராயல் விமானப்படையின் விமானங்கள் (ஸ்பிட்ஃபயர் மற்றும் ஹரிக்கேன் போன்றவை) ஜெர்மானிய குண்டுவீச்சு விமானங்களைத் தாக்கி அவற்றிற்குப் பேரழிவை ஏற்படுத்தின. பிரிட்டன் போரில் (1940 ஜூலை முதல் அக்டோபர் வரை வான்வெளியில் நிகழ்ந்தவை) ஹிட்லர் தனது முதல் தோல்வியை சந்தித்தார். எனினும் ஜெர்மனியின் U–வகை படகுகள் (ஜெர்மானிய நீர்மூழ்கி கப்பல்களில் ஒரு வகை) அட்லாண்டிக் கடலில் நிகழ்த்தியப் போர் பிரிட்டனின் வணிகத்தைப் பெரிதும் பாதித்தது.



12th_History_TM_Unit_14_V2.indd 130 24-09-2019 10:58:17




ஜெர்மன் U–படகு

1940 நவம்பரில் ரஷ்யாவை தாக்கலாம் என்று ஜெர்மனி எடுத்த முடிவு பால்கன் (ஏப்ரல்) பகுதியில் யுகோஸ்லோவியாவிற்கும், கிரீஸ் நாட்டிற்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டப் பிரச்சாரத்தால் ஒத்திவைக்கப்பட்டது. சோவியத் மீதான படையெடுப்பு 1941 ஜூன் 22இல் துவங்கியது. பல தொடர் வெற்றிகளுக்குப் பின்னர் ஜெர்மன் படைகள் லெனின்கிராடையும், மாஸ்கோவையும் நெருங்கின. 1941இல் ஹிட்லரின் பேரரசு ஐரோப்பாவில் உச்சத்தை அடைந்தது.

ஜெர்மனியின் ஆட்சி பரவிய இடங்கள் யாவும் அடக்குமுறைக்கும் மனிதத்தன்மையற்றப் போக்கிற்கும் சுரண்டலுக்கும் உட்படுத்தப்பட்டன. பிரான்சு முதல் ரஷ்யா வரை எழுபது லட்சத்திற்கும் அதிகமான ஐரோப்பியர்கள் கொத்தடிமைகளாக்கப்பட்டு ஜெர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். ஜெர்மனியின் போர் செலவுகளில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பியப் பகுதிகளில் இருந்து வசூலிக்கப்பட்டது. நாஜி பேரினவாத வன்முறை யூதர்கள், பொதுவுடைமைவாதிகள் மற்றும் நாடோடிகள் போன்றோர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. யூதர்கள் குவித்திணி (வதை) முகாம்களில் (Concentration Camps) சிறைவைக்கப்பட்டு அறுபது லட்சம் என்ற அளவிற்கு அரசால் ஆதரவளிக்கப்பட்ட இனப்படுகொலைக்கு தொழில்முறை கொல்லும் உத்தி மூலமாக (Holocaust என்று சொல்லப்படுகிறது) உட்படுத்தப்பட்டார்கள்.

## ஆசியாவிலும் பசிபிக்கிலும் நிகழ்ந்த போர்

சோவியத் நாட்டில் ஜெர்மனி அடைந்த வெற்றிகள் ஜப்பானியத் தலைவர்களை தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகள் மீதும் படையெடுக்கத் தூண்டியது. 1941 நவம்பரில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது போர் தொடுக்கும் முடிவு எடுக்கப்பட்டது. டிசம்பர் 7ஆம் நாள் ஜப்பானிய விமானப்படை ஹவாய் தீவுகளில் அமைந்திருந்த அமெரிக்க கடற்படைத் தளமான பேர்ல் துறைமுகம் (Pearl Harbour) மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தி பெரும் சேதத்தை விளைவித்தது. அதன்பின் ஜப்பான் ஆங்கிலேய காலனியப் பகுதிகளான பர்மா, மலேயா, சிங்கப்பூர் (மிகவும் வெட்கக்கேடான முறையில் இப்பகுதியின் மக்களை ஜப்பானியரின் கருணையில் விடுத்து ஆங்கிலேயர்கள் தப்பி ஓடினர்) மற்றும் டச்சு கிழக்கிந்தியப் பகுதிகளையும் ஆக்கிரமித்தது.

## பேர்ல் துறைமுக சம்பவமும் அதன் தோல்வியும்

E5F4T9

ஜப்பான் பேர்ல் துறைமுகம் மீது நிகழ்த்திய தாக்குதல் அமெரிக்க மக்களின் நெஞ்சுரத்தை மங்கச் செய்வதற்கு மாறாக அவர்களை செயலில் இறங்கத் தூண்டியது. அதுவரை பொதுக்கருத்தின்படி போரில் தலையிடாமல் இருந்த அந்நாடு ஜப்பானின் மீது போர்ப் பிரகடனம் செய்து முழுமையான உலகப்போருக்கு வழிவகுத்தது. பிரிட்டனும், சீனாவும் அமெரிக்க ஐக்கிய நாட்டோடு கைகோர்த்தன. இத்தாலியும் ஜப்பானும், ஜெர்மனியோடு இணைந்த சூழலில் அமெரிக்க குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் கடன்–குத்தகை முறையின் (Lend–Lease System) கீழ் பாசிசத்தை எதிர்க்கும் நாடுகளுக்கு உதவுவதாக உத்திரவாதம் அளித்திருந்தார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் நேரடி ஈடுபாட்டின் வாயிலாக நேச நாடுகள் அனைத்தும் இணைந்து கொண்டு வந்திருந்ததைவிட அதிகமான வாகனங்களும் கப்பல்களும் விமானங்களும் வந்து சேர்ந்ததால் அவற்றின் பொருள்வள தளம் அகலமானது. 1942 ஆகஸ்டில் மெக் ஆர்தர் தலைமையிலான அமெரிக்கப் படைகள் பசிபிக் பகுதியில் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஜப்பானிய கப்பற்படை தலைவரான யமமோடா திட்டமிட்ட கடற்போர் பெரும் தோல்வியில் சென்று முடிந்தது.



பேர்ல் துறைமுகம் மீதான தாக்குதல்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் கப்பற்படை மிட்வே கடற்போரில் (1942 ஜூன் 4–7) ஜப்பானிய



12th_History_TM_Unit_14_V2.indd 131 24-09-2019 10:58:17

கடற்படையை தோல்வியுறச் செய்தது, நேச நாடுகளுக்கு அலை தங்களுக்கு சாதகமாக திரும்புகிறது என்ற எண்ணத்தை உருவாக்கியது. சாலமோன் தீவுகளில் நடந்த குவாடல்கனல் போரில் இராணுவமும் கடற்படையும் இணைந்து பல மாதங்கள் (1942 ஆகஸ்ட் 7 முதல் 1943 பிப்ரவரி 9 வரை) தாக்குதலைத் தொடர்ந்தன. இப்போரும் ஜப்பானியர்களுக்கு பெரும் தோல்வியாகவே முடிந்தது. அதன்பின் அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகள் பிலிப்பைன்ஸ் பகுதியை மீட்டுக் கொண்டதோடு ஜப்பானியர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டனர். 1944இல் பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் இணைந்து இந்தியாவின் வட-கிழக்குப் பகுதியின் வழியாக நுழைய ஜப்பானியர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்தன. அதன்பின் அப்படைகள் சீனாவோடு இணைந்து ஜப்பானை பர்மாவிலிருந்து விரட்டியதோடு மலேயாவையும், சிங்கப்பூரையும் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்கள்.

### ஸ்டாலின்கிராட் போர், 1942

ஜெர்மனியின் மின்னல் வேக தாக்குதல் உத்தி ஆரம்பகட்டத்தில் சோவியத் ரஷ்யாவிலும் வெற்றியை வழங்கியது. ஆனால் ஜெர்மானியப் படைகளால் மாஸ்கோ வரை சென்றுசேர முடியவில்லை. அது உலக வரலாற்றில் கடுமையாக இரத்தம் கொட்டியப் போரை ஸ்டாலின்கிராடில் எதிர்கொண்டது. ஆயுதங்களையும், டிராக்டர் வகை இழுவை எந்திரங்களையும் அதிக அளவில் தயார் செய்துகொண்டிருந்த மிகப் பெரும் தொழில் நகரான ஸ்டாலின்கிராட் வெற்றிக்கனியாக தங்களுக்கு கிடைக்கும் என்று ஹிட்லர் எண்ணியிருந்தார். மேலும் எண்ணெய் வளம் மிக்க காகசஸ் பகுதியின் மீதும் அவரது கண்கள் படர்ந்திருந்தன. அனைத்திற்கும் மேலாக செல்வாக்கு கொண்ட சோவியத் தலைவரான ஜோசப் ஸ்டாலினின் பெயர் கொண்ட நகரை ஆக்கிரமிப்பது தனது பெருமையை உயர்த்தும் என்று ஹிட்லர் கருதினார். ஆனால் ஜெர்மானிய இராணுவத்தால் நீண்ட காலத்திற்கு ஸ்டாலின்கிராடை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்த பிறகும், ஹிட்லர் பின்வாங்க மறுத்தார். உத்திக்காக மேற்கொள்ளும் பின்வாங்கல்கூட நாஜி சிந்தனையின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்திவிடக்கூடும் என்று அவர் அஞ்சினார். அதனால் தேசிய உணர்வால் உத்வேகம் பெற்று ஓய்வில்லாமல் தாக்குதலைத் தொடுத்த ரஷ்ய படைகளின் முன் கடுங்குளிருக்கும் பசிக்கும் மரணத்துக்கும் தனது வீரர்களை ஹிட்லர் கொடுத்தார். சோவியத் நாடு (1942ஆம் ஆண்டு) கோடைகாலத்தில் கொடுத்த பதிலடி நிலைமையை அதன் பக்கம் திருப்பியது. இராணுவ வரலாற்று ஆசிரியர்கள் பலரும் போரின் போக்கை ஸ்டாலின்கிராட் போரே மாற்றி அமைத்தது என்று எழுதுகிறார்கள்.



ஸ்டாலின்கிராட் போர்

ரஷ்யாவின் சிகப்புப் படைகள் நடத்திய "பெரும் தேசாபிமானப் போரில்" அடைந்த வெற்றி அதன் பாதையை பெர்லின் நோக்கித்திருப்பியது. நேச நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்காவோடு இணைந்த சோவியத்நாடு கூட்டாக ஜெர்மனியை தோற்கடித்ததால் ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஒரு புள்ளிவிபர கணக்கின்படி போரில் 2 கோடி ரஷ்யர்கள் உயிர் நீத்திருந்தார்கள் (அதில் 1 கோடியே 30 லட்சம் இராணுவ வீரர்களும், 70 லட்சம் சாதாரணக் குடிமக்களும் அடங்குவர்).

### முசோலினியின் வீழ்ச்சி

1942இன் இறுதியில் வட ஆப்பிரிக்காவின் எல் அலாமினில் ஜெர்மனி அடைந்த பின்னடைவே நேச நாடுகளுக்கு நம்பிக்கையை கொடுத்த முதல் சம்பவமாகும். எர்வின் ரோமல் தலைமையில் ஜெர்மன்-இத்தாலியக் கூட்டுப் படைகள் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து வட ஆப்பிரிக்காவின் பாலைவனத்தில் நடத்திய எல் அலாமெய்ன் போரில் ஜெர்மனி மே 1943இல் சரணடைந்தது. பின்னர் நேசநாடுகளின் படைகள் சிசிலியின் மீது படையெடுத்தன. முசோலினியிடம் 1922இல் அதிகாரத்தை ஒப்படைத்த அதே மன்னரான மூன்றாம் விக்டர் இம்மானுவேல் மீண்டும் பொறுப்பேற்றதோடு அவருடன் ஜெனரல் படோக்லியோவும் பதவியேற்று அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கலாயினர். முசோலினி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். ஜெனரல் படோக்லியோவின் அரசு சிசிலியில் 1943 செப்டம்பர் 3இல் முறையாக சரணடைவதாக கையெழுத்திட்டுக் கொடுத்தது.



12th_History_TM_Unit_14_V2.indd 132 24-09-2019 10:58:18


1943இல் நேசநாடுகள் இரு உச்சநிலை மாநாடுகளை நடத்தின. ஜனவரி மாதத்தில் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் காசாபிளாங்காவில் சந்தித்துப் பேசினர். அங்கே அவர்கள் ஏறக்குறைய நான்கு ஆண்டுகளாக (1940–1944) ஜெர்மனியின் ஒரு மாகாணமாகவே மாறிப் போயிருந்த பிரான்ஸ் மீது படையெடுக்கும் முடிவை ஓராண்டிற்கு ஒத்திப்போட்டார்கள். (பிரான்சை ஆக்கிரமித்திருந்த ஜெர்மானியர்கள் வசம் 60 படைப் பிரிவுகள் இருந்தன) இரண்டாவது மாநாடு பாரசீகத்தில் அமைந்த டெஹ்ரான் நகரில் நடந்தபோது அதில் ஸ்டாலினும் பங்கெடுத்தார். அங்கு திட்டமிடப்பட்ட உத்தியின்படி பிரான்ஸ் மீது ஆங்கிலேய–அமெரிக்க கூட்டுப் படைகள் 1944 ஜூன் 6இல் தாக்குதல் தொடுப்பது என்று முடிவுசெய்யப்பட்டது. நேச நாடுகளின் படைகளுக்கு உச்சதளபதி அமெரிக்க ஜெனரல் ஐசன்ஹோவர் ஆவார்.

### ஆங்கிலேய–அமெரிக்க படைகளின் படையெடுப்பும் ட்ரெஸ்டன் மீது குண்டு வீச்சும்

ஐசன்ஹோவரின் தலைமையை ஏற்ற நேச நாடுகளின் படைகள் பிரான்சின் நார்மண்டி மீது படையெடுத்தன. அப்பகுதியை ஆக்கிரமித்திருந்த ஜெர்மானியப் படைகள் அப்புறப்படுத்தப்பட்டு 1944 ஆகஸ்ட் 25இல் பாரிஸ் விடுவிக்கப்பட்டது. செப்டம்பர் மாதத்தின் துவக்கத்தில் நேச நாடுகள் பிரான்சு முழுமையிலும் கட்டுப்பாட்டை நிறுவியதோடு பெல்ஜியத்தையும் ஆக்கிரமித்தன. நேச நாடுகளின் குண்டு வீச்சு (1945 பிப்ரவரி 13–15) ஜெர்மனியின் ட்ரெஸ்டன் நகரை முற்றிலுமாக அழித்தது. இக்காலக்கட்ட தாக்குதல்கள் ஜெர்மனிக்கு எதிரான 'திகிலூட்டும் குண்டுவீச்சுக்களாகவே' (terror bombing) அடையாளப்படுத்தப்பட்டன. இச்சமயத்தில் 6,00,000 ஜெர்மன் குடிமக்கள் கொல்லப்பட்டார்கள். படிப்படியாக ஜெர்மானியப் படைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. ஆனாலும் அவர்களின் எதிர்ப்பு தொடர்ந்ததால் மேலும் ஓராண்டுக்குப் போர் நீடித்தது.

1945இல் ஜெர்மனி மீதான இறுதி தாக்குதல் மேற்கு மற்றும் சோவியத் படைகளை மத்திய ஜெர்மனி முழுவதும் நேருக்கு நேர் கொண்டு வந்தது. ஹிட்லர் மத்திய பெர்லினில் மறைந்திருந்த பதுங்குகுழியை 1945 ஏப்ரல் 30இல் சோவியத் படைகள் நெருங்கின. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். பெர்லின் மே 2ஆம் நாள் சோவியத் வசமானது. சோவியத் படைகள் அதற்கு முன்பாகவே கிழக்கு ஐரோப்பாவையும், போலந்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன.

### அணுகுண்டுகள் வீச்சும் இரண்டாம் உலகப்போரின் முடிவும்



ஜப்பான் மீது அணுகுண்டு தாக்குதல்

ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டாலும், ஜப்பானின் இராணுவ தளபதிகள் சரணடைய மறுத்தார்கள். இறுதியாக அமெரிக்க ஐக்கிய நாடு 1945 ஆகஸ்ட் 6இல் ஹிரோஷிமா நகர் மீது அணுகுண்டு வீசிவிட்டு அதிலிருந்து மூன்று நாட்கள் கழித்து (ஆகஸ்ட் 9) நாகசாகி நகர் மீது மற்றொரு அணுகுண்டை வீசியது. அணுகுண்டு தயாரிக்கும் போட்டியில், அமெரிக்க ஐக்கிய நாடு ஜெர்மனியை முந்தியது. ஜப்பான் உடனடியாக சரணடைந்ததில் இரண்டாம் உலகப்போர் முடிவுற்றது. ஏறக்குறைய 60,000 முதல் 80,000 வரையிலான மக்கள் குண்டு விழுந்த கணத்திலேயே ஹிரோஷிமா நகரில் மாண்டதாகவும், குண்டு ஏற்படுத்திய கதிர்வீச்சின் பாதிப்பில் அந்த ஆண்டு முடிவதற்குள் மேலும் 1,40,000 மக்கள் இறந்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆபத்தான கதிர்வீச்சின் காரணமாக புற்றுநோய் (இரத்தப்புற்று) தாக்கியும், பிற நோய்களாலும் தொடர்ந்து வந்த பதிற்றாண்டுகளில் இறப்பு எண்ணிக்கை 2,00,000 தாண்டியது.


போரின் காரணங்களை விளக்கும் வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களை கூறுவதில் வேறுபட்டு நிற்கிறார்கள். முரட்டுத்தனமானதாகவும் பழிவாங்கும் நோக்குள்ளதாகவும் இருந்த வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை சிலர் சுட்டுகிறார்கள். அத்தகையோர் ஜெர்மனி அவ்வொப்பந்தத்தின் சரத்துகளை மாற்ற முனைந்ததனைக் கொண்டு அந்நாட்டின் பக்கம் உள்ள நியாயத்தை கோடிட்டுக் காட்டுகிறார்கள். மற்றும் சிலர் பிரான்சும், பிரிட்டனும் கடைப்பிடித்த சமரசப் போக்கைச் சாடுகிறார்கள். வேறு சிலர் பிரிட்டனும் பிரான்சும் சோவியத் நாட்டோடு ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாமல் போனதைக் குறை கூறுகிறார்கள். இந்நாடுகள் சோவியத் நாட்டை நம்பத் தயங்கியதோடு 1934 முதல் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தி அது கொடுத்த முன்மொழிவுகளுக்கு பதிலளிக்காமலும்

இழுத்தடித்தன. எனினும் பெரும்பான்மையான வரலாற்று ஆசிரியர்கள் ஜெர்மனியையும் ஹிட்லரையுமே போர் ஏற்படப் பொறுப்பாகக் கருதுகிறார்கள். நாடுபிடிக்கும் ஆசையையும், பேரினவாத (ஆரிய) தூய்மைக் கருத்தியலையும் அடித்தளமாக அமைத்து, நேர்மையும் இரக்கமுமற்ற ஆக்கிரமிப்புக் கொள்கையை கூறுகளாக கொண்ட தேசியவாதம், ஆறு ஆண்டுகளுக்கு உலகப் பேரிழப்பை ஈன்ற போரை நோக்கி வழிநடத்தி சென்றதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். 'இரண்டாம் உலகப்போர் ஹிட்லரின் போரே. அவரே திட்டமிட்டார், துவங்கினார், இறுதியாக இழக்கவும் செய்தார்'.

### அமைதியை நிலைநிறுத்தல்

குடியசுத் தலைவர் ரூஸ்வெல்டும், பிரதம அமைச்சர் சர்ச்சிலும் இணைந்து வழங்கிய அறிக்கையான அட்லாண்டிக் பட்டயமே அமைதி நடவடிக்கையை வழிநடத்த அடிப்படையாக அமைந்தது. அதன் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1) மக்களின் ஒப்புதல் இல்லாமல் பிரதேச சீரமைப்புகள் ஏற்படுத்தலாகாது.
2) அரசைத் தேர்ந்தெடுக்க முழுஉரிமை கொண்டவர்கள் குடிமக்களே.
3) அனைத்து நாடுகளுக்கும் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், உலகின் பிற பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பெறுவதிலும் சமத்துவத்தை ஏற்படுத்துதல்.
4) தடையில்லாமல் கடல்கடந்து செல்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.
5) ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நாடுகளை ஆயுதக்குறைப்பிற்கு உட்படுத்துதல்.



சர்ச்சில் – ட்ரூமன் – ஸ்டாலின்

இது நீங்கலாக வேறு அமைதி மாநாடுகள் ஏதும் நடத்தப்படவில்லை. போட்ஸ்டாம் சந்திப்பில் பிரிட்டன், சோவியத் நாடு, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி முறையே சர்ச்சில், ஸ்டாலின், ட்ரூமன் ஆகியோர் கலந்து கொண்டு ஐந்து பெரும் சக்திகளின் – ஏற்கனவே குறிப்பிடப்பட்ட மூன்று பெரும் சக்திகளோடு சீனாவும், பிரான்சும் சேர்க்கப்பட்டு – வெளியுறவுத்துறை அமைச்சர்களின் குழுவை ஏற்படுத்தி அமைதியை நிலைநிறுத்தத் தேவையான பணிகளைத் தொடர ஒப்புக்கொள்ளப்பட்டது. இக்குழுவே ஐரோப்பாவில் அமைதி ஏற்படுத்த அங்கீகரிக்கப்பட்ட முக்கிய முகமையாக கருதப்படலானது. இத்தாலி ஹங்கேரி, பெல்ஜியம் மற்றும் ருமேனியா ஆகியவற்றோடு ஏற்படுத்தப்பட இருந்த அமைதி உடன்படிக்கையை இத்தாலியோடும், ஜெர்மனியோடும் தீர்வை எட்டுவதற்கு முன்பே இறுதிப்படுத்த முடிவுசெய்யப்பட்டது. பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, சோவியத் நாடு மற்றும் பிரான்ஸ் ஆகியவை இத்தாலியோடு ஏற்படுத்தவிருந்த ஒப்பந்தத்தின் சரத்துகளை வரைவது என்றும், அதுபோல பெரும் மூன்று நாடுகள் கூடி மூன்று பால்கன் பகுதிகளுக்கான ஒப்பந்தத்தை வரைவது என்றும், பிரிட்டனும், சோவியத் நாடும் பின்லாந்துக்கான ஒப்பந்தத்தை வரைவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன்பின் வரையப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் ஒரு பொதுக்குழுவின் முன்வைப்பது என்றும் ஆனது.

### அமைதி மாநாடு, 1946

பாரிஸ் நகரில் அமைந்த லக்ஸம்பர்க் அரண்மனையில் 1946 ஜூலை 26 முதல் அக்டோபர் 15 வரை 21 நாடுகளைச் சேர்ந்த 1500 பிரதிநிதிகள் கலந்து கொண்ட அமைதி மாநாடு நடைபெற்றது. ஆழ்ந்த கலந்தாலோசனைகளுக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட பரிந்துரைகள் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மறுஆய்விற்குப் பின் சில மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**இத்தாலிய அமைதி உடன்படிக்கை:** ட்ரிஸ்டியை குறித்த சர்ச்சை பல ஆண்டுகளுக்கு இழுபறியை ஏற்படுத்தியது. இத்தாலி ட்ரிஸ்டியை கோரியது. சோவியத் யூனியன் அதை யுகோஸ்லோவிய நாட்டிற்கு வழங்குவதாக வாக்களித்திருந்தது. இறுதியாக 1954இல் ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரித்தனர். அதனடிப்படையில் A மண்டலம் இத்தாலிக்கும் B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கும் பிரித்து வழங்கப்பட்டது. இத்தாலி கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடாக $ 260,000,000 நிர்ணயிக்கப்பட்டது (இதில் பெரும் பகுதி தொகை கிரீசையும், யுகோஸ்லாவியாவையும் சென்றடைந்தது).

**ரஷ்யா பெற்ற இழப்பீடு:** ஹங்கேரி, பெல்ஜியம் மற்றும் ஃபின்லாந்து ஆகிய நாடுகள் ரஷ்யாவிற்கு $100,000,000 கொடுக்க வேண்டும் என்றானது. பல்கேரியா யுகோஸ்லாவியாவிற்கு $25,000,000மும், கிரீசிற்கு $4,000,000 கொடுக்க வரையறுக்கப்பட்டது. ருமேனியா தான் 1919இல் பெற்றுக்கொண்ட பெசரேபியாவையும் பின்னர் இணைத்துக் கொண்ட புகோவினாவையும் ரஷ்யாவிடம் மீண்டும் ஒப்படைக்க ஒப்புக்கொண்டது. பெல்ஜிய உடன்படிக்கைகள் டான்யூப் மீது கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள வழிவகை செய்தது. ஆனால் அதனை ரஷ்யா தடுத்தது. ஒப்பந்தங்கள் 1947 செப்டம்பர் 15 முதல் நடைமுறைக்கு வந்தன. ஆனால் அதன் சரத்துகள் முறியடிக்கப்படுதலுக்கோ, புறக்கணிக்கப்படுதலுக்கோ உள்ளாயின.

**ஆஸ்திரியா:** ஆஸ்திரியாவின் தென் கரிந்தியப் பிராந்தியத்தில் ஒரு பகுதியின் மீது யுகோஸ்லோவியா உரிமை கோரியதால் சர்ச்சைகள் கிளம்பின. இழப்பீடாக யுகோஸ்லோவியா $150,000,000யும் கோரியது. ஜெர்மனியின் சொத்துக்களின் மதிப்பீடு குறித்த சர்ச்சை அதனை கணிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணையத்தால் 85 முறை கூடியும் அப்பணியை செய்து முடிக்க முடியவில்லை என்ற நிலையில் தொடர்ந்தது. ரஷ்யாவிற்குத் தரப்படவேண்டிய இழப்பீட்டிற்காக ஆஸ்திரியாவின் எண்ணெய் வளங்களையும், கப்பல் போக்குவரத்து வசதியையும் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்து கொடுத்ததோடு, இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்ட $150,000,000 தொகையை ஆறு வருடங்களில் படிப்படியாக கொடுத்துமுடிக்கும் வரை அதற்கு ஈடான ஜெர்மனியின் சொத்துக்களை அந்நாடு பயன்படுத்திக்கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது. ஆஸ்திரியா ஒரு சுதந்திர, இறையாண்மை கொண்ட, மக்களாட்சியைப் பின்பற்றும் நாடாக்கப்பட்டு 1938இல் ஜெர்மனியோடு வலுக்கட்டாயமாக இணைக்கப்படுவதற்கு முன்பிருந்த அதே எல்லைகளோடு மறுநிர்ணயம் செய்யப்பட்டது. தன்பங்கிற்கு ஆஸ்திரியா ஜெர்மனியோடு அரசியல்ரீதியாகவோ, பொருளாதார அடிப்படையிலோ எந்த தொடர்பும் கொள்ளக்கூடாது என்பதற்கு உடன்பட்டது.

**ஜெர்மனி:** பெர்லினுக்கு அருகாமையில் அமைந்திருந்த போட்ஸ்டாமில் நடைபெற்ற மாநாட்டில் வழங்கப்பட்ட அறிவிப்பின்படி அறியப்படுவதாவது: 1. கிழக்குப் பிரஷ்யாவை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தல்: வடபகுதி சோவியத்தையும், தென்பகுதி போலந்தையும் சேருவது. 2. முன்பு சுதந்திரப் பகுதியாக இருந்த டான்சிக் நகரை போலந்து பெற்றது. ஜெர்மனியின் இராணுவ சக்தி முழுமையாக ஒழிக்கப்பட்டு அதனை நான்கு தொழில் மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொன்றும் சோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்குள் விட முடிவுசெய்யப்பட்டது. இவ்வாறு போருக்கு முன்பாக இருந்த ஜெர்மனியின் பெரும் பகுதிகள் ரஷ்யாவிற்கும் போலந்திற்கும் பிரித்து வழங்கப்பட்டன. ரஷ்ய மண்டலத்தின் இதயமாக பெர்லின் விளங்கினாலும் நாட்டின் பிற பகுதிகள் நான்கு ஆக்கிரமிப்பு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. ஜெர்மன் ஜனநாயக குடியரசு (German democratic Republic) 1949 ஏப்ரலில் சோவியத் மண்டலத்தைச் சேருவதாக அறிவிக்கப்பட்டது. நேட்டோ (NATO) ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசை (Federal Republic of Germany) அங்கீகரிக்க முன்வந்தது. செப்டம்பர் மாதத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசில் செயல்பாட்டுக்கு வந்தது.

### போலந்து

போலந்து மேற்குப்புறமாக 200 மைல்களுக்கு உள்வாங்கி கிட்டத்தட்ட 69,000 சதுர மைல்கள் வரை சோவியத்திடம் இழந்து மேற்கு திசையில் இழந்ததை காட்டிலும் சற்று குறைவான பகுதிகளை ஜெர்மனியிடம் இருந்து பெற்றது. போலந்து தனது கிழக்கு மாகாணங்களை ரஷ்யாவிடம் ஒப்படைப்பதோடு, சோவியத் பாதுகாப்புக்குட்பட்ட போலந்து அரசாங்கம், துருவங்களிலிருந்து ஜனநாயக தலைவர்களை இணைப்பதன் மூலம் மறுசீரமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

### ஜப்பான்

குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட், பிரதம அமைச்சர் சர்ச்சில் மற்றும் தேசியவாத சீனாவின் ஜெனரல்இஸிமோ சியாங் கே-ஷேக் ஆகியோர் நவம்பர் 1943இல் கெய்ரோவில் கூடி ஜப்பானியப் பேரரசின் எதிர்காலத்தைப் பற்றிய முடிவையெட்ட முயன்றனர். கொரியா நீங்கலாக ஜப்பான் சீனாவிடமிருந்து கவர்ந்த மற்ற பகுதிகளை சீனக்குடியரசுவிடமே ஒப்படைப்பதென்று ஏற்கப்பட்டது. கொரியா விடுதலை பெற்று சுதந்திர நாடாக அறிவிக்கப்படவுமிருந்தது. ஜப்பான் 1931ஆம் ஆண்டு முதல் பிடித்துவைத்திருந்த அனைத்துப் பகுதிகளை மட்டுமல்லாமல் பார்மோசாவையும் (தைவான்), பசிபிக் கடலில் பல பதிற்றாண்டுகளுக்கு முன் பிடித்துவைத்திருந்த தீவுகளையும் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு கொள்ளப்பட்டது.



12th_History_TM_Unit_14_V2.indd 135 24-09-2019 10:58:18



சர்ச்சில் – ரூஸ்வெல்ட் – ஸ்டாலின்

கிரிமியாவில் உள்ள யால்டாவில் நடந்த மாநாட்டிற்குப் (பிப்ரவரி 1945) பின் முப்பெரும் தலைவர்கள் ரூஸ்வெல்ட், சர்ச்சில், மற்றும் ஸ்டாலின் ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணடைவிற்கான திட்டத்தை அறிவித்ததோடு, போருக்குப்பின் ஜெர்மனியையும் அதன் நட்பு நாடுகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது குறித்த முறைமைபற்றியும், ஐக்கிய நாட்டு சபையை ஏற்படுத்தி அமைதியை காப்பது குறித்தும், பொருளாதார அமைப்பை உருவாக்குவதும், மொத்தமாக பிரெட்டன் வுட்ஸ் அமைப்பு என்று அறியப்பட்டது. உலக வங்கி, பன்னாட்டு நிதியம் (International Monetary Fund), வியாபாரம் மற்றும் கட்டணங்களுக்கானப் பொது உடன்படிக்கை (General Agreement on Trade and Tariff) போன்றவற்றை உருவாக்கி அவற்றின் மூலமாக போரில் பொருளாதார அழிவைச் சந்தித்த நாடுகளை மறுசீரமைக்க உதவுதல் பற்றியும் தெளிவுபடுத்தினர். முதல் உலகப்போருக்குப் பின் நேர்ந்தது போன்று அல்லாமல் இம்முறை ரூஸ்வெல்ட் ஐக்கிய நாட்டு சபையை உலக அமைதி அமைப்பில் அங்கம் வகிக்கும் வகையில் நிர்ப்பந்திக்க தீர்மானமாக இருந்தார்.

## இரண்டாம் உலகப்போரின் முடிவுகள்

இரண்டாம் உலகப்போர் எதிர்பார்த்திருக்காதப் பல சிரமங்களைக் கொடுத்தது. ஏறக்குறைய 6 கோடி நபர்கள் இறந்ததோடு பெரும் நகரங்களான வார்சா, கீவ், டோக்கியோ மற்றும் பெர்லின் போன்றவை தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. ஐரோப்பாவின் பெரும்பான்மையான முக்கிய துறைமுகங்கள் பலவும் அழித்தொழிக்கப்பட்டது போன்று ஆசியாவிலும் பல துறைமுகங்கள் அழிவை சந்திக்கவும், பாலங்கள் உடைக்கப்படவும், இருப்புப்பாதை இயந்திரங்களும், பெட்டிகளும் உருத்தெரியாமல் அழிவைச் சந்தித்தன. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தார்கள். பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது. ஐரோப்பா தனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது. பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது. உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவாகியிருப்பது தெளிவுபட்டது. இரு சக்திகளுக்குமிடையே நிலவிய சித்தாந்தப் பிளவானது போருக்குப் பின் தேவைப்பட்ட ஒத்துழைப்பை எவ்வாறு பாதித்தது என்பதை அடுத்த பாடத்தில் காண்போம்.

பிரிட்டனின் கௌரவம் உயர்ந்தது போன்று தெரிந்தாலும் அதன் வளங்கள் குறைந்து, பேரரசின் எல்லைகள் சுருங்கியதில் உலக சக்தி என்ற நிலையை அது இழந்தது. ஐரோப்பாவில் பல நாடுகளில் தொடர்ந்துகொண்டிருந்த மன்னராட்சிக்கு அது முடிவுகட்டியது. ருமேனியா, யுகோஸ்லோவியா, பல்கேரியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் முடியாட்சி ஒழிக்கப்பட்டது. பிரிட்டன் நீங்கலாக முடியாட்சி டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ஹாலந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் அது தொடர்ந்தாலும் அதன் தன்மை அரசியல்சாசனத்திற்கு கட்டுப்பட்டதாகவே மாறிப்போயிருந்தது.

உலக அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய பாசிச சிந்தனையை வீழ்த்த உலக நாடுகள் யாவும் ஒன்று கூடின. நேச நாடுகளின் வெற்றிக்குப்பின் சாமானிய மக்கள் போர் நடவடிக்கைகளுக்கு நல்கிய ஆதரவும் தலைதூக்கி நின்றது. பாசிசத்திற்கு எதிரான போர் அடித்தள மக்களை அதிகாரத்தில் பங்குபெறச் செய்தது. போர்க்காலத்தில் பலரும் கூடி எதிர்கொண்ட துயரங்களும் புரிந்த தியாகங்களும் மக்களாட்சி மீது நம்பிக்கையை வலுப்படுத்தியதோடு, அனைத்து குடிமக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவேண்டியப் பொறுப்பை அரசுகளுக்கு உணர்த்தியது. உதாரணமாக 1945இன் கோடைக்காலத்தில் பிரிட்டனில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை (Welfare State) உருவாக்குவதில் தீவிரம் காட்டியது. விபத்து, நோய், வயதுமுதிர்ச்சி, வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்வோருக்கு துணைபுரிவதே பிரிட்டன் அரசின் பொறுப்பாக கருதப்படலானது. பெண்கள் போரின்போது எதிர்கொண்ட துயரங்களையும் அவர்களின் பங்களிப்பையும் கௌரவிக்கும் விதமாக அவர்களின் உரிமைக்கான தளம் விரிவுபடுத்தப்பட்டது. பிரான்சிலும் இத்தாலியிலும் பெண்களுக்கு நீண்டகால காத்திருப்பிற்குப்பின் இறுதியாக வாக்குரிமை வழங்கப்பட்டது.

போரின் முக்கியத்துவம் வாய்ந்த விளைவு காலனிய நாடுகளில் நிகழ்ந்த மாற்றமேயாகும்.



12th_History_TM_Unit_14_V2.indd 136 24-09-2019 10:58:18

உலகெங்கும் நடந்த மக்களாட்சியை முன்வைத்த போராட்டங்கள் தேசியவாத சக்திகளை சுதந்திரப் போராட்டத்தை தீவிரப்படுத்த தூண்டியது. போரின் ஆரம்பகட்டத்தில் ஜப்பான் மேற்கத்திய நாடுகளை தென்கிழக்கு ஆசியாவில் தோற்கடித்தமையும், அது போலவே பிரிட்டனும், பிரான்சும் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டமையும் வெள்ளையர்களும் அவர்தம் நாடும் தோற்கடிக்கப்படகூடியவையே என்ற தெளிவான சமிக்ஞையை ஏற்படுத்தியது. பழைய பேரரசுகளும் அவைகளுக்கான காலம் முடிவை எட்டிவிட்டதை உணர்ந்து கொண்டன. உதாரணமாக இந்தோனேஷியத் தீவுக் கூட்டத்தில் ஒரு பெரும் படையை நிர்வகிப்பதில் உள்ள சிரமங்களை டச்சு நாட்டினர் உணர்ந்து கொண்டனர். இந்தோ–சீனாவில் பிரான்சு முதலில் பிரிட்டனின் ஆதரவோடும், பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் துணையோடும், விடுதலை வழங்கப்பட்ட பகுதியை மீண்டும் கட்டுக்குள் கொண்டுவர கடுமையாக முயன்றது. ஆனால் பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டு 1954இல் அவர்கள் வெளியேற்றப்படவும் ஆளானார்கள். தங்களின் உலக ஏகாதிபத்திய சக்தியை மீண்டும் நிலைநிறுத்த 1956இல் பிரான்சும், பிரிட்டனும் சூயஸ் கால்வாய் பிரச்சனையின் வாயிலாக முயன்றபோது அதுவும் தோற்றது. பின்னர் வியட்நாமை எதிர்த்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் போர் அதற்கு வெட்கித் தலைகுனியும் நிலையையே ஏற்படுத்தியது.

## 14.2 சீனப் புரட்சி 1949

மிக நீண்டவரலாற்றைக் கொண்ட சீனா பல்வேறு வரலாற்று காலங்களில் ஐரோப்பாவைக் காட்டிலும் மிகவும் மேம்பட்ட ஒரு நாடாகும். ஆனால் 1900வாக்கில் சீனா பலநிலைகளிலும் பின் தங்கியிருந்தது. அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க காரணம் என்னவென்றால் 1650ஆம் ஆண்டு முதல் அந்நாட்டை மிக நீண்டகாலமாக ஆண்டுவந்த மஞ்சு அரசின் நேர்மையற்ற மற்றும் திறமையற்றதுமான ஆட்சிமுறையே ஆகும். கற்றுத் தேர்ந்து அதிகார மையமாக விளங்கிய மாண்டரின்கள் என்றழைக்கப்பட்ட நிலக்கிழார்கள் வர்க்கம், அந்நாட்டின் நிலை அவ்வாறே தொடர்ந்து தாங்கள் பெற்றுவந்த சலுகைகளுக்கு பாதிப்பில்லாமல் இருப்பதையே விரும்பியது. விவசாயம் சார்ந்த பெருவாரியான மக்கள் அதிகமான வாடகையாலும், வரிகளாலும், நிலப் பற்றாக்குறையாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். விவசாய உற்பத்தி தேக்கமடைந்தது. பயிரிடப்பட்ட பகுதிகள் மக்கள்தொகை அடர்த்தி நிறைந்ததாக அமைந்திருந்ததோடு பெருவாரியான வேளாண் நிலங்கள் ஒரு ஏக்கருக்கும் குறைவானதாகவே இருந்தன. சீனாவில் நிலக்கரியும் இரும்புத்தாதுவும் தேவைக்கு மிதமிஞ்சி இருந்தாலும் தொழில் வளர்ச்சி மிக மெதுவான ஒன்றாகவே இருந்தது.



தைபிங் கிளர்ச்சி

அரசியல் மற்றும் பொருளாதார அடக்குமுறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல எழுச்சிகளுக்கு வழிவகுத்திருந்தது. அதில் மிகவும் தீவிரமானது தைபிங் கிளர்ச்சியாகும் (1850–1864). அதனை ஒடுக்க அரசிற்கு பதினான்கு ஆண்டுகள் பிடித்தது என்பதே அரசின் பலவீனத்தைக் காட்டுவதாகும். வளர்ந்துவரும் ஐரோப்பிய நெருக்கடியானது பிரிட்டிஷாரில் துவங்கி பிரெஞ்சு, ஜெர்மானிய, ரஷ்ய மற்றும்

**தைபிங்** (பெரும் அமைதி என்று பொருள்) **கிளர்ச்சி** ஒரு விவசாய கிளர்ச்சியாக மட்டுமே துவங்கியது. ஆனால் விரைவில் அது ஹங் ஹிஸியு–சுவான் என்ற வேளாண் பின்புலத்தைக் கொண்டு பள்ளி ஆசிரியரின் தலைமையில் ஒரு புரட்சி இயக்கமாகவே வடிவெடுத்தது. அவர் மக்களிடையே சமத்துவம், நிலத்தை சமமாக பகிர்தல், பழைய சமூக வேற்றுமைகளுக்கு முடிவுகட்டல் போன்ற கருத்துக்களை எடுத்துச் சென்றார். 1853இல் இவ்வியக்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு மில்லியன் என்ற அளவை எட்டி நான்கிங் பகுதியை வெற்றிகரமாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றதோடு நாட்டின் 40 சதவீதப் பகுதிகளை தனிநாடாக பாவித்து இயக்கமே நிர்வகிக்கலானது. ஆனால் தைபிங்கின் தலைமை விவசாய குடிகளின் ஏற்றத்திற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமலே இருந்தது. மறுசீரமைக்கப்பட்ட சீனப் பேரரசின் படைகள், பிரிட்டனாலும், பிரான்சாலும் வழங்கப்பட்ட நவீன ஆயுதங்களைக் கொண்ட பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான மேஜர் கோர்டன் தலைமையில் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. நான்கிங் 1864இல் மீண்டும் பேரரசோடு இணைக்கப்பட்டது.



12th_History_TM_Unit_14_V2.indd 137 24-09-2019 10:58:18

அமெரிக்க நாடுகளின் கட்டாயத்தினால் சீனா வெளிநாடுகளுக்கு அதன் துறைமுகங்களில் வணிக உரிமையை வழங்கும் நிலையேற்பட்டது. பிரிட்டிஷார் இருமுறை சீனர்களுடன் போர் புரிந்தனர் (அபினிப் போர்). இக்காலகட்டத்தில் சீனா தைபிங் கிளர்ச்சியை ஒடுக்க தனது சக்தி முழுமையையும் செலுத்திக் கொண்டிருந்ததால் அது வெளிநாடுகளை தடுத்து நிறுத்த இயலாத சூழலை உருவாக்கியது. ஹாங்காங்கிலிருந்து ஆர்தர் துறைமுகம் வரையான பரந்துவிரிந்த பரப்பு ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. அதிலும் செழுமைக்கு பெயர்பெற்ற துறைமுகமாக ஷாங்காய் மாறிப்போயிருந்தது.



முதல் அபினிப் போர்

புதிதாக நவீனயுகத்திற்குள் நுழைந்த ஜப்பான் 1894ஆம் ஆண்டு முதல் தனது ஆதிக்க செயல்களை துவங்கியதும் சீனாவின் வலுவிழந்த நிலையை தெளிவுப்படுத்துவதாகவே அமைந்தது. பார்மோசா ஜப்பானை சென்றுசேரவும், கொரியா சுதந்திரமடையவும் 1895இல் கையெழுத்திடப்பட்ட அமைதி உடன்படிக்கையே காரணமாக அமைந்தது. அதன்பின் ஆயிரக்கணக்கான ஐரோப்பிய வியாபாரிகள் சீன வணிகத்தில் சுரண்டலைக் கையாண்டார்கள். கிறித்தவ சமயபோதகர்கள் சீனாவில் கால்பதித்து உள்நாடு வரை தங்கள் நம்பிக்கையைப் பரப்பினார்கள். ஐரோப்பியர்களின் செயல்பாடுகளும் அவர்கள் உள்ளூர் நிர்வாகத்தில் மேற்கொண்ட குறுக்கீடுகளும் சீனர்களுக்கு அவர்கள் மீது வெறுப்பைப் பெற்றுத் தந்தது. வெளிநாட்டினர் மீது வெறுப்பு உச்சத்தில் இருந்த 1900ஆம் ஆண்டின் காலகட்டத்தில் தொடர்ந்து இரு விளைச்சல் தோல்வியும், மஞ்சள் ஆற்றின் வெள்ளத்தால் நேர்ந்த இழப்புகளும் வந்துசேர்ந்தன. இதையடுத்து பாக்ஸர் கிளர்ச்சி வெடித்தது.

**அபினிப் போர்கள்:** சீனாவில் போதைக்கு உள்ளானோரின் இறப்பால் ஏற்பட்ட மனித இழப்பின் அளவு எல்லையை மீறியபோது சட்டத்திற்குப் புறம்பான அபினி வியாபாரத்தை ஒடுக்க சீன அரசு முயன்றது. பிரிட்டிஷ் வணிகர்களே சீனாவில் அபினி விநியோகத்தின் முதன்மை ஆதாரமாக இருந்தனர். முதலாம் அபினிப் போரின் (1842) இறுதியில் கையெழுத்திடப்பட்ட நான்கிங் உடன்படிக்கை பிரிட்டனுக்கு சீனாவின் கதவுகளைத் திறந்துவிட்டது. சீனா ஹாங்காங்கை விட்டுக் கொடுத்ததோடு இழப்பீடாக ஒரு தொகையையும் வழங்கியது.

முதல் போர் சீன அதிகாரிகள் கான்டன் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷாரின் பதிவுசெய்யப்பட்ட ஆரோ (Arrow) என்ற கப்பல் ஒன்றின் மாலுமிகளை கள்ளகடத்தல் குற்றத்திற்காக கைது செய்தமைக்காகவே மூண்டது. கப்பல் சீனர்களுக்கு சொந்தமானது என்பதோடு அதில் இருந்த மாலுமிகளும் சீனர்களே. ஆனால் ஹாங்காங் அரசு கொடுத்த அனுமதியின் பெயரில் பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்டிருந்த காலவரம்பும் முடிவடைந்திருந்தது. ஆனபோதிலும் ஏதாவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி போர் நெருக்கடி கொடுத்தால் அதன் வாயிலாக அதிக சலுகைகள் பெற்றுவிடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிரிட்டன் இந்நிகழ்வின் எதிரொலியாக தனது போர்கப்பல் ஒன்றை அனுப்பியது. போர் மூண்ட காலகட்டத்தில் தனது நாட்டின் சமயபோதகர் ஒருவர் சீனாவில் கொல்லப்பட்டதாக (பிப்ரவரி 1856) காரணம்காட்டிய பிரான்சும் பிரிட்டனோடு இணைந்து தாக்குதல் தொடுத்தது. இம்முறை பிரிட்டிஷாரையும், பிரெஞ்சுக்காரர்களையும் உள்ளடக்கிய படை பீகிங்கின் கோடைக்கால அரண்மனையை அழித்தது. இறுதியாக 1860இல், சீனா பிரிட்டனின் உயர்வான படைபலத்திற்கு கட்டுப்பட்டு பெய்ஜிங் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. அது சீனாவின் துறைமுகங்கள் வியாபாரத்திற்கு திறக்கப்படவும், யாங்ட்சே வரை வெளிநாட்டுக் கப்பல்கள் செல்லவும், சமய போதகர்கள் தடையின்றி தங்களுடைய பணியை மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. மிக முக்கியமாக அது சீனாவில் பிரிட்டிஷார் சட்டத்திற்கு உட்பட்டு அபினி வியாபாரம் மேற்கொள்ள வசதி செய்தது.



12th_History_TM_Unit_14_V2.indd 138 24-09-2019 10:58:18

**பாக்ஸர் கிளர்ச்சி (1899–1901):** பாக்ஸர் என்பது ஈஹிகுவான் என்ற சீன இரகசிய சங்கத்தை குறிக்க அயல்நாட்டினர் பயன்படுத்திய சொல்லாகும் (Yihequan எனும் பதம் "நியாயம் மற்றும் ஒருமைப்பாட்டின் கரம்" என்ற பொருள் கொண்டது). பாக்ஸர்கள் பல்வேறு பின்புலத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் பெரும்பான்மையானோர் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஷான்டுங் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட விவசாயிகளேயாவர். பாக்ஸர்களின் முக்கிய குறிக்கோள் என்பது மஞ்சு வம்சத்தை முடிவிற்குக் கொண்டு வருவதோடு முறைகேடாக சலுகைகளைப் பெற்று வந்த மேற்கத்தியர்களை சீனாவைவிட்டு அப்புறப்படுத்துவதுமாகும். பாக்ஸர்கள் தேவாலயங்களையும், அயல்நாட்டினரின் வீடுகளையும் தீக்கிரையாக்கி கிறித்தவ சமயத்தை தழுவிய சீனர்களைப் பார்த்த இடத்திலேயே கொன்று குவித்தார்கள். பன்னாட்டுப் படை ஒன்று பீகிங் நகரை சூறையாடியதில் பேரரசியும் அவர்தம் அவையாரும் ஓட்டம்பிடித்தனர். ஏறக்குறைய 100,000 மக்கள் மடிந்தனர். இறந்தோரில் பெரும்பான்மையானோர் சாதாரண குடிமக்கள் என்பதும், அதில் ஆயிரக்கணக்கான சீன கிறித்தவர்களும், 200 முதல் 250 வரையான அயல் நாட்டினரும் (பெரும்பாலும் சமய போதகர்கள்) அடங்குவர் என்பதும் கவனிக்கத்தக்கது.



பாக்ஸர் கிளர்ச்சி

பாக்ஸர் கிளர்ச்சி 1901 செப்டம்பர் 7இல் கையெழுத்திடப்பட்ட பாக்ஸர் முதன்மை குறிப்போடு (Boxer Protocol) முறையான முடிவிற்கு வந்தது. இதன்படி பெய்ஜிங் நகரைச் சுற்றி அரணாக அமைந்திருக்கும் கோட்டைகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும் என்றானது. பாக்ஸர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்ட சீன அதிகாரிகளும் தண்டிக்கப்பட்டனர். அயல்நாட்டு தூதரகங்கள் தங்களின் சுயபாதுகாப்பிற்காக பெய்ஜிங்கில் படைகளை நிறுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்கு சீனா ஆயுதங்களை இறக்குமதி செய்யக்கூடாதெனவும், போரில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு $330 மில்லியனுக்கும் மேலான ஒரு தொகையை சீனா இழப்பீடாக வழங்கவும் முதன்மை குறிப்பு சரத்துகளைக் கொண்டிருந்தது.

1911 அக்டோபர் மாதம், வூச்சங்கில் நிறுத்தப்பட்டிருந்த துருப்புகள் கலகத்தில் இறங்கியதே புரட்சி முறையாக துவங்கியதற்கான அறிகுறியாக கொள்ளப்படுகிறது. கலகக்காரர்கள் விரைந்து வூச்சங்கின் நாணயச்சாலையையும் ஆயுதக்கிடங்கையும் கையகப்படுத்தியவுடன் ஒவ்வொரு நகராக மஞ்சுக்கள் மீது போர்ப் பிரகடனம் செய்தார்கள். புரட்சி யாங்சே பள்ளத்தாக்கில் வெடித்துக் கிளம்பி விரைவாகவே மத்திய மற்றும் தென் சீனாவின் பெரும் பகுதிக்குப் பரவியது. புரட்சியில் ஈடுபட்டிருந்த மாகாணங்கள் 1912இல் புத்தாண்டுப் பிறப்பின்போது நான்கிங்கை தலைநகராகக் கொண்டு ஒரு குடியரசு பிறந்துவிட்டதாக பிரகடனப்படுத்தின. இக்கலகச் செய்தியை அறிந்த சன் யாட்–சென் ஷாங்காய் நகரை வந்தடைந்ததும் அங்கே அவர் சீன குடியரசின் தற்காலிக குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மஞ்சுக்களின் ஆட்சியில் அமைச்சராக பதவி வகித்த யுவான் ஷி–காயை, குழந்தையாக இருந்த பேரரசரின் பிரதிநிதி புரட்சியை அடக்கும் பொறுப்பை ஏற்க அழைப்புவிடுத்தார். ஆனால் மக்களின் எண்ணப்போக்கை உணர்ந்த யுவான் பேரரசரை பதவிதுறக்க வலியுறுத்தினார்.

1912 பிப்ரவரி 12இல் பதவிதுறத்தலுக்கான அரசாணையை வெளியிட்டு மஞ்சு வம்சம் (கிங் அரசு) சீன அரசியல் காட்சியில் இருந்து விடைபெற்றது. தொடர்ந்து வந்த மாதத்தில் இராணுவ கட்டுப்பாட்டை யுவானே வைத்துக் கொண்டிருந்ததால் தேசிய நலன் கருதி அவருக்கு சாதகமாக சன் யாட்–சென் இராஜினாமா செய்தார்.

### யுவான் ஷி–காயின் செல்வாக்கற்ற தன்மை

தனது நான்கு வருட நிர்வாக காலத்தில் யுவான் ஷி–காய் தான் ஜனநாயகத்திற்கும் குடியரசிற்கும் விரோதமானவர் என்பதை நிரூபித்தார். அவர் கோமின்டாங்கையே தடை செய்யுமளவிற்குச் சென்று அதன் ஆட்சி நடந்த மாகாணங்களை எல்லாம் தன்வசப்படுத்த முயன்றார். யுவான் 1913 அக்டோபர் 10இல் சீன குடியரசின் முழுமையான குடியரசுத் தலைவராக பதவியேற்றார். சரியாக



12th_History_TM_Unit_14_V2.indd 139 24-09-2019 10:58:19

### சன் யாட்–சென் (1866–1925)



ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த டாக்டர் சன் யாட்–சென் ஒரு மிஷன் பள்ளியில் பயின்று பின் மருத்துவரானார். அரசியலில் அவர் கொண்ட ஆர்வம் அவரை கிங் அரசிற்கு எதிரான 1895ஆம் ஆண்டின் கிளர்ச்சியில் ஈடுபட தூண்டியது. அக்கிளர்ச்சி தோற்றதால் சன் யாட்–சென் அடுத்த பதினாறு ஆண்டுகளை நாடுதுறந்து கழிக்கும்படி ஆயிற்று. சீன மாணவர்களிடமும், வெளிநாடு வாழ் சீனர்களிடமும் அவரது புரட்சிகர கருத்துக்களைப் பரப்புவதில் தனது நேரத்தை செலவிட்டார். அவர் 1905ஆம் ஆண்டு டோக்கியோ நகரில் உருவாக்கிய அரசியல் கட்சி கோமின்டாங் அல்லது தேசிய மக்கள் கட்சி என்று ஆனது.

சன் யாட்–சென் மூன்று சித்தாந்தங்களை வலியுறுத்தினார்: தேசியவாதம், ஜனநாயகம், மற்றும் சோஷலிஸம். சன் யாட்–சென் 1894ஆம் ஆண்டு சீன மறுமலர்ச்சி சங்கத்தை உருவாக்கி அதில் அவர்களின் பெருமைக்கு விதிவிலக்காக சீனா மீது அயல்நாடுகளால் திணிக்கப்பட்ட "சமநிலை மீறிய இரு ஒப்பந்தங்களை" சுட்டிக் காட்டினார். இச்சங்கம் அதிவேகத்தில் வளர்ந்ததோடு அதிக அளவில் இளைஞர்களை ஈர்த்தது. அது 1912ஆம் ஆண்டு தனது பெயரை கோ–மின்–டாங் என்று மாற்றிக் கொண்டது. இவ்வமைப்பின் உந்து சக்தியாக விளங்கிய சன் யாட்–சென் ஒரு குடியரசை விரும்பினாரேயன்றி அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட மன்னராட்சியை அல்ல.

மூன்று மாதங்களுக்குப்பின் அவர் தேசிய அவையை கலைத்துவிட்டு அதனிடத்தில் "அரசியல் குழு" ஒன்றை உருவாக்கி அதன் வழியே 'பொருத்தமான அரசியல்சாசனத்தை' (Constitutional Compact) வரைவிக்கவைத்து குடியரசுத் தலைவர் பதவியை சர்வாதிகாரமிக்கதாக மாற்றினார். இதனால் யுவான் அவரது ஆயுட்காலம் முழுவதும் குடியரசுத் தலைவராக பதவிவகிக்க வழி ஏற்படுத்தப்பட்டது. மஞ்சூரியா மற்றும் ஷாண்டுங்கின் பொருளாதார கட்டுப்பாட்டை ஜப்பான் கொண்டிருக்கவேண்டும் என்ற ஜப்பானிய கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டபோது யுவான் மக்களின் வெறுப்புக்கு ஆளானார். 1916ஆம் ஆண்டு யுவான் இறந்தபின் ஒரு புதிய குடியரசுத் தலைவர் நியமிக்கப்பட்டார். அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பெயரளவில் மட்டுமே நடுவண் தன்மை கொண்டதாக அரசு விளங்கியது. அது சீர்குலைவின் காலமானது. அதே சமயம் சீனாவின் வடபகுதியில் மார்க்சிய சிந்தனை வலுப்பெறவும், கடற்கரை நகரங்களான ஷாங்காய்க்கும், கான்டனுக்குமிடையே சன் யாட்–சென்னின் செயல்பாடுகள் சூடுபிடிக்கவும் செய்தது.

### சீனாவின் பொதுவுடைமைக் கட்சி

முதல் உலகப்போரின் காலத்தில் யுவான் ஷி–காய் மறைந்ததும், வெவ்வேறு அதிகாரபலமும் போட்டி மனோபாவமும் கொண்ட சீன இராணுவத் தலைவர்களால் நாடு பிளவுபட்டது. அறிவார்ந்த மக்கள் பலரும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தாராளவாத கொள்கை மீது நம்பிக்கை கொண்டு அதுவே இச்சிக்கலை தீர்க்க சரியான வழி என்று கருதினர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்திருந்தப் பலன்கள் கிடைக்கவில்லை என்றானதும் ஏமாற்றமடைந்தனர். லட்சக்கணக்கான மக்கள் தங்களின் ஏமாற்றத்தை பேரணிகள் நடத்தியும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டும் வெளிப்படுத்தினாலும் மாணவர்களே இவற்றுள் தலையாயப் பணிகளை மேற்கொண்டார்கள். ரஷ்யப் புரட்சி 1917இல் வெடித்து கிளம்பியதன் பாதிப்பில் அறிவார்ந்த மக்கள் மத்தியில் மார்க்ஸ், லெனின் போன்றவர்களின் எழுத்துக்களும், உரைகளும் பிரபலமாயின. சீனாவின் வளர்ந்துவரும் தொழில்துறை தொழிலாளர் வர்க்கம் வலிமையைப் பெற்று வேலை நிறுத்தங்கள் மற்றும் புறக்கணிப்புகள் மூலம் அதை வெளிப்படுத்தியதால் மார்க்சிய சிந்தனை மீது அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. 1918ஆம் ஆண்டில் மார்க்சியத்தைப் படிப்பதற்கான ஒரு சங்கம் பீகிங் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டது. அதன் பயிலரங்குகளில் பங்கெடுத்த மாணவர்களில் இளம் உதவி நூலகரான மா சே–துங்கும் ஒருவர்.

சீனாவில் 1922ஆம் ஆண்டு தொடர் வேலை நிறுத்தங்கள் வெடித்தன. இராணுவ சட்டப் பிரகடனம் நடைமுறையில் இருந்தும் ஹாங்காங்கில் ஏறத்தாழ 2,000 மாலுமிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சிறிது காலத்தில் 1,20,000 தொழிலாளர்கள் கலந்து கொண்ட பொது வேலை நிறுத்தமாக உருப்பெற்று முதலாளிகளே அமைதி கோரும் நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியது. ஹாங்கௌவில் பிரிட்டிஷ் காவலர்களுக்கும் பிரிட்டிஷாருக்கு சொந்தமான ஆலையின் ஊழியர்களுக்கும் இடையே நடந்த மோதலில் சண்டையையே தொழிலாகக் கொண்ட ஒருவன் சுட்டதில் 35 இரயில்வே ஊழியர்கள் கொல்லப்பட்டது



12th_History_TM_Unit_14_V2.indd 140 24-09-2019 10:58:19

மட்டுமன்றி தொழிற்சங்க கிளை செயலர் ஒருவர் தூக்கிலிடப்பட்டார். இத்தகைய ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தொழிலாளர் வர்க்கத்தின் இயக்கத்தை தற்காலிகமாக மிதப்படுத்தியதேயன்றி அவர்களின் எதிர்ப்புணர்வை ஒழித்துவிடவில்லை. மாறாக அது வர்க்க உணர்வை அதிகப்படுத்தியது.

**மா சே-துங் (1893-1976)**

தென்-கிழக்கு சீனாவில் அமைந்த ஹுனான் பகுதியில் மாவோ பிறந்தார். அவரது தந்தையார் ஒரு வசதியான விவசாயி என்பதோடு அவர் மஞ்சு அரசவழியின் தீவிர ஆதரவாளர் ஆவார். மாவோ புரட்சி நடந்த ஆண்டில் (1911) சாங்ஷாவில் இருந்த இளையோர் கல்லூரியில் சேர்ந்தார். அவர் புரட்சிப் படையில் சேர்ந்தாலும் சாங்ஷாவில் அமையப்பெற்ற ஆசிரியப் பயிற்சி கல்லூரியில் சேரும் பொருட்டு அதிலிருந்து வெளியேறினார். அங்கே 1918 வரை இருந்த மாவோ நூலகத்தில் நீண்ட நேரத்தினை செலவிட்டார். பின்னர் பீகிங்கிற்குப் பயணப்பட்ட அவர் பீகிங் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகப் பொறுப்புவகித்தார். அதற்கு அடுத்த ஆண்டு முழுமையான அரசியல் செயல்பாட்டாளராக மாறிய மாவோ, ஹுனானில் அமைப்பாளராக பொறுப்பேற்றதோடு தீவிர பொதுவுடைமைவாதியாகவும் உருப்பெற்றார்.

இதற்கிடையே சன் யாட்-சென் அரசியல் சாசன அடிப்படையில் ஒரு அரசை நிறுவியிருந்தார். ஆனால் அதன் நிலை வலுவற்றதாக இருந்தது. அதனால் அவர் தனது கோமின்டாங்கை மறுசீரமைக்க சோவியத் நாட்டின் உதவியைக் கோரினார். சோவியத் நாடு மைக்கேல் பரோடினை சீனாவுக்கு அனுப்பியது. தேர்ந்த பொதுவுடைமைவாதியான பரோடின் கோமின்டாங்கை மறுசீரமைப்பிற்கு உட்படுத்தி அதை மையப்படுத்தப்பட்ட மக்கள் கட்சியாக்கியதோடு ஒரு புரட்சிப் படையை உருவாக்கவும் உதவினார். சோவியத் அதிகாரிகளின் துணை கொண்டு கான்டனில் வம்போவா இராணுவக்கழகம் உருவாக்கப்பட்டது. அதன் முதல் இயக்குனராக சியாங் கே-ஷேக் பதவியேற்றார். சீன பொதுவுடைமை கட்சிக்கும், கோமின்டாங்கிற்கும் ஏற்பட்ட கூட்டணியால் சூ-யென் லாய் அக்கழகத்தில் அரசியல் செயல்பாடுகளுக்கான பொறுப்பு ஊழியராக்கப்பட்டார்.

## கோமின்டாங்கும் சியாங்க் கே-ஷேக்கும்

1925ஆம் ஆண்டு சன் யாட்-சென் மறைந்த பின் கோமின்டாங் பொதுவுடைமை கட்சி போன்று அமைக்கப்பட்டதேயொழிய அதன் கொள்கைகள் பொதுவுடைமை சிந்தனையை உள்ளடக்கியதாக இல்லை. கோமின்டாங்கின் தலைவராக சியாங் கே-ஷேக் இருந்தபோது பொதுவுடைமை கட்சி


சியாங் கே-ஷேக்

மா சே-துங் மற்றும் சூ-யென் லாயின் கட்டுப்பாட்டில் இருந்தது. பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கு தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடையே பெருகி அதன் இராணுவத்திற்கு வெகுவாக ஆட்களைப் பெற்றது. கோமின்டாங் நிலக்கிழார்கள் மற்றும் முதலாளிகளின் ஆர்வங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருந்தது.

'வடக்கத்தியப் பயணம்' என்று அறியப்படும் அணிதிரண்டப் பயணத்தை கான்டன் நகரில் துவக்கிய சியாங் கே-ஷேக் 1925ஆம் ஆண்டின் கடைசியில் ஹாங்கோ நகரை கைப்பற்றினார். 1927 மார்ச் மாதத்தில் பயணம் ஷாங்காய் நகரை நெருங்கிக் கொண்டிருந்தபோது 6,00,000 ஊழியர்கள் எழுச்சிபெற்று பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதோடு அவர்களின் தொழிற்சங்கங்கள் நகரின் கட்டுப்பாட்டை தங்கள் வசம் கொண்டு வந்தன. சியாங் கே-ஷேக் ஏற்கனவே கான்டன் நகரில் ஊழியர்கள் இயக்கத்தை கடுமையாக ஒடுக்கியிருந்ததோடு பொதுவுடைமைவாத செயல்பாட்டாளர்கள் பலரையும் கைது செய்தும், அவர்களின் தொழிற்சங்கங்களை மோசமாக அச்சுறுத்தவும் செய்திருந்தார். ஷாங்காய் நகரில் வெற்றிக்களிப்பில் இருந்த போராட்ட சக்திகளிடமிருந்து நகரின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொண்ட அவர் சூழ்ச்சியாக குற்றப் பின்புலம் கொண்ட கும்பல்களையும், சீன வியாபாரிகளையும், அயல்நாட்டு சக்திகளின் பிரதிநிதிகளையும் இணைத்து விடியலுக்குமுன்பான எதிர்பாராத தாக்குதலை முக்கியமான இடதுசாரி தொழிற்சங்க அலுவலகங்களின் மீது தொடுக்கவைத்தார். தொழிலாளர்களது காவல்காரர்களின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டதோடு அவர்களது தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். அதை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது எந்திரத் துப்பாக்கி கொண்டு சுடப்பட்டதில் ஆயிரக்கணக்கான செயல்வீரர்கள் எதிர்த்துப் போராடி இறந்தனர். செல்வாக்குமிக்க வியாபாரிகளும், நிதியாளர்களும் கொடுத்த அழுத்தத்தில் சியாங் கே-ஷேக் கோமின்டாங் கட்சியிலிருந்த அனைத்து பொதுவுடைமைவாதிகளையும் வெளியேற்றினார். அவர் 1928இல் பீகிங் நகரை வெற்றிகரமாக



12th_History_TM_Unit_14_V2.indd 141 24-09-2019 10:58:19

ஆக்கிரமித்தார். சீனாவில் மீண்டும் ஒரு நடுவண் அரசு உருவானது. ஆனால் அடுத்த 18 ஆண்டுகளுக்கு அவரது அரசு ஊழல் மலிந்ததாகவும், வன்முறை கும்பல்களின் பிடியில் சிக்கியும் சீரழிந்தது.

கோமின்டாங்கின் பிடி நகர்புறங்களில் இறுக்கமாக இருப்பதை உணர்ந்த மாவோ, விவசாயக்குடிகளை ஒன்று திரட்டுவதில் தனது கவனத்தைச் செலுத்தினார். கியாங்ஸிக்கும் ஹுனானுக்குமிடைப்பட்ட காடுகளால் சூழப்பெற்ற மலைப்பகுதிகளில் அவர் தஞ்சமடைந்தார். இப்பகுதியில் மாவோவும், அவரது தோழர்களும் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு இருந்தனர். அடியோடு அழித்தொழிக்கும் நோக்கோடு ஐந்து படையெடுப்புகளை கோமின்டாங் நடத்தி இருந்தாலும் அவர்களால் அம்மலைப் பகுதியில் ஊடுருவ முடியவில்லை என்பதோடு மாவோவின் படைபலம் நாளுக்கு நாள் விரிவடைந்தது. பொதுவுடைமைவாதிகளுக்கு இப்புதுதளத்தில் சியாங் கே–ஷேக்கின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு கிடைத்ததோடு ஜப்பானியர்களிடமிருந்து தொடர்ச்சியாக எழுந்து கொண்டிருந்த அச்சுறுத்தல்களில் இருந்தும், போரையே தொழிலாக கொண்டிருந்த கிழார்களிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பாக இருந்தது.

### நீண்ட பயணம் 1934



நீண்ட பயணம்

பொதுவுடைமைவாதிகளின் நிலைகளைச் சுற்றி வளைத்து சியாங் கே–ஷேக் அரண் எழுப்பியிருந்ததால் மாவோ பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஹுனானை விட்டு அகல முடிவுசெய்தார். இதையடுத்து 1934இல் பொதுவுடைமை இராணுவம் மேற்கொண்டதே 'நீண்ட பயணம்' என்றழைக்கப்படுகிறது. அணிவகுத்து சென்றோர் வழிநெடுகிலும் கோமின்டாங் இராணுவத்தாலும், போர்க்கிழார்களின் படைகளாலும், தோழமையற்ற பழங்குடியினர்களாலும் தொடர் துயரங்களுக்கு ஆளானார்கள். கோமின்டாங் படையினரின் எந்திர துப்பாக்கியின் உக்கிரமும், காதுகளை செவிடாக்கும் ஆற்றின் சீற்றங்கொண்ட ஓசையும் நகர்ந்து கொண்டிருந்தோருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. கிளம்பி சென்ற 1,00,000 நபர்களில் 1935ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஏறக்குறைய 6,000 மைல்கள் என்ற தூரத்தை கடந்து 20,000 நபர்களே வடக்கு ஷேன்ஸியை வந்தடைந்தார்கள். அங்கு மேலும் பல பொதுவுடைமைவாத இராணுவங்கள் அவர்களோடு இணைந்ததில் 1937ஆம் ஆண்டுவாக்கில், மா சே–துங் 10 மில்லியன் மக்களின் ஆட்சியாளரானார். ஷேன்ஸி மற்றும் கன்ஸூவில் அமைந்த கிராமங்களில் மாவோ தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் குழுக்களை அமைத்து பொதுவுடைமைவாதிகள் சீனாவில் ஆட்சியை கைப்பற்றுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தினார்.

### ஜப்பானிய ஆக்கிரமிப்பும் அதன் பின்னடைவும்

ஜப்பானியர்கள் மஞ்சூரியாவை இராணுவத் தளமாகக் கொண்டு சீனாவின் வடக்கு மாகாணங்களைத் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். மாவோ ஜப்பானியர்களை எதிர்க்கும் பொருட்டு சில காலம் சியாங்க் கே–ஷேக்கின் கோமின்டாங்கை அரவணைத்து செல்லவேண்டும் என்று நினைத்தார். நடைமுறை சூழலுக்கேற்ற இந்நிலைப்பாட்டால் பொதுவுடைமைவாதிகள் மீதான தாக்குதல் படிப்படியாக குறைந்தது. எனினும் ஜப்பானியர்களின் விரிவாக்கத் திட்டத்தை முறியடிக்க கடுமையான நடவடிக்கைகளைப் பின்பற்ற முடிவுசெய்யப்பட்டது. எனினும், கோமின்டாங்கின் படைகள் எளிதாக வீழ்ந்ததால் இரண்டாம் உலகப்போரின்போது கிழக்கு சீனாவின் பாதியை ஜப்பான் ஆக்கிரமித்துக் கொண்டது. சியாங் கே–ஷேக் தனது தலைநகரை சுங்கிங் நகருக்கு மாற்ற நிர்பந்தம் ஏற்பட்டது.

### பொதுவுடைமைவாதிகளின் வெற்றி

ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டு வீசியதால் 1945இல் ஜப்பான் சரணடைவதாக அறிவித்தவுடன் சீனாவில் இருந்த இரு அணிகளும் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை ஆக்கிரமிக்க உடனடி நடவடிக்கையில் இறங்கினர். இப்போட்டியின் போக்கைக் கண்ட



மாவோ



12th_History_TM_Unit_14_V2.indd 142 24-09-2019 10:58:19

அமெரிக்க ஐக்கிய நாடு இரு அணிகளையும் பேச்சுவார்த்தையில் ஈடுபட அறிவுறுத்தியது. 1946இல் தளபதி ஜார்ஜ் மார்ஷல் இருமுறை போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் எந்தப் பயனும் இல்லாமல் போனது. அமெரிக்க ஐக்கிய நாடு வழங்கிய பெரும் ஆதரவால் கோமின்டாங் அரசு பொது நிர்வாகத்தையும் துறைமுகங்களையும் தகவல் தொடர்பையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டது. ஆனால் வேளாண் பின்புலத்தைக் கொண்ட கோமின்டாங்கின் வீரர்கள் ஏமாற்றத்தோடும் அதிருப்தியோடும் இருந்தார்கள். இதற்கு மாறாக மாவோவின் படை மனவுறுதியுடனும் மிகுந்த ஒழுக்கத்துடனும் திகழ்ந்தது. உள்நாட்டுப் போர் வெடித்தவுடன் சியாங் கே–ஷேக்கின் படைகள் சிதைவடைந்ததுடன் அதன் தளபதிகள் கட்சிமாறவும் துவங்கினார்கள். நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விழத் துவங்கின. சியாங் கே–ஷேக் 1949ஆம் ஆண்டின் இறுதியில் முக்கிய நிலப்பகுதியை விட்டு அகன்று தைவானில் தஞ்சம் புகுந்தார். சீன மக்கள் குடியரசு 1949இல் நிறுவப்பட்டது.

## 14.3 இந்தோனேஷியாவிலும், பிலிப்பைன்சிலும் நடந்த விடுதலை போராட்டங்கள்

இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து வந்த மாவோவின் வெற்றி காலனிய நாடுகளில் ஏகாதிபத்திய சக்திகள் தோற்கடிக்கப்படகூடியவைதான் என்ற செய்தியை தெளிவுபடுத்தியது. ஆனால் தென்கிழக்காசியாவில், அதிலும் குறிப்பாக பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியாவில் தேசியவாதம் ஆரம்பகட்டத்தில் தேங்கி நின்றதோடு 20ஆம் நூற்றாண்டின் துவக்கம் வரை சுய–அரசை நிர்ணயிப்பது குறித்து பெரிய முன்னேற்றம் ஏதும் இருக்கவில்லை. மூன்றரை ஆண்டுகளுக்கு ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விளைவாக ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளின் கௌரவத்தை கணிசமாக கீழிறக்கியதோடு ஆக்கிரமிப்புக்குட்பட்ட நாடுகளில் தேசிய இயக்கங்கள் வலுப்பெறவும், சக்திகொள்ளவும் செய்தன. ஆனால் ஜப்பான் 1945இல் தோற்கடிக்கப்பட்ட பின், மேற்கத்திய சக்திகள் தங்களின் பழைய எல்லைப் பகுதிகளுக்கு திரும்ப முனைந்தன. அவர்கள் மீண்டும் காலனிய ஆட்சியாளர்களாகவே பொறுப்புவகிக்க முயன்றபோது குறுகிய காலத்திலேயே அது உண்மைக்குப் புறம்பானதென தெரியத் துவங்கியது. இதன் விளைவாக டச்சுக்காரர்களும் அமெரிக்கர்களும் உலகப்போருக்குப் பின் எழுந்த பொதுவுடைமை தலைமைத்துவத்திடம் அதிகாரம் சென்றுவிடாத வகையில் நண்பர்களாக தெரிந்த மிதவாத தேசாபிமானிகளிடம் பொறுப்பை ஒப்படைக்கும் முயற்சியை மேற்கொண்டனர்.

### கிழக்கிந்திய தீவுகள் (இந்தோனேஷியா)

1640ஆம் ஆண்டிலிருந்தே ஜாவா, சுமத்ரா ஆகிய பகுதிகளை டச்சுக்காரர்கள் ஆக்கிரமித்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் அவர்கள் கிழக்கிந்திய தீவுகளின் வெளிசுற்று தீவுகளையும் ஆக்கிரமிக்கலானார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் போது டச்சுக்காரர்கள் அரசியல் அதிகாரத்தை விரும்பாமல் பொருளாதார கட்டுப்பாட்டை மட்டுமே முதன்மையாக விரும்பினர். அத்தீவுகளில் பெரும்பான்மையான மக்கள் மீன் பிடித்தலையும் விவசாயத்தையுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். ஐரோப்பியர்களுக்கு சொந்தமான கரும்பு, புகையிலை, தேயிலை மற்றும் காபி தோட்டங்களில் பலரும் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இத்தோட்டங்களில் செய்யப்பட்டிருந்த அதிக அளவிலான முதலீடுகளும் எண்ணெய் (1900) கண்டுபிடிக்கப்பட்டப்பின் மேற்கொள்ளப்பட்ட பிற முதலீடுகளும், அவை விளைவித்த ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் இப்பகுதியை டச்சுக்காரர்களுக்கு முக்கியமானதாக ஆக்கியது.



டச்சு காலனிய ஆட்சி

கிழக்கு தீவுகளில் தேசியவாத இயக்கம் பிலிப்பைன்ஸ் நாட்டை விட மிகவும் தாமதமாக உருவானது. இதற்கு டச்சுக்காரர்கள் மேற்கத்திய கல்வியை காலதாமதமாக அறிமுகப்படுத்தியதே காரணமாகும். பிலிப்பைன்ஸில் யூரோசியன்கள் (ஐரோப்பிய–ஆசிய கலப்பினத்தார்) தங்களை சொந்த மண்ணின் பிரச்சனைகளோடு இனங்கண்டு கொண்டதோடு தேசிய இயக்கத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றனர். மாறாக டச்சுக்காரர்கள் இன முன்விரோதமின்றி பூர்வீககுடிகளுடன் திருமண உறவை ஏற்படுத்திக்கொண்டு யூரோசியன்களையும் அவர்களின் சமூகத்திற்குள்



12th_History_TM_Unit_14_V2.indd 143 24-09-2019 10:58:19

அரவணைத்துக் கொண்டார்கள். யூரோசியன்களும் தங்களின் எண்ணங்கள் டச்சுக்காரர்களோடு ஒத்திருப்பதாகவே உணர்ந்தார்கள்.

### தேசியவாதத்தின் எழுச்சி

கிழக்கிந்திய தீவுகளில் தெளிவான தேசியவாதத்தை வெளிப்படுத்திய முதல் நிகழ்வென்பது 1908ஆம் ஆண்டு உள்ளூர் அரசியல் சங்கமான போய்டி ஓடோமா (உயர் முயற்சி Boedi Oetomo) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்தே துவங்குகிறது. இச்சங்கம் முதல் டச்சு மருத்துவப் பள்ளியின் மாணவர்களால் அவர்களின் மூத்த மாணவரான வஹிதின் சுதுரோஹூசோடோ (Wahidin Sudurohusodo) என்பவரின் திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது. உள்ளூர் அறிஞர் பெருமக்களே நாட்டின் கல்வி மேம்பாட்டிற்கான வழிகாட்டும் தலைவர்களாக திகழவேண்டும் என்பதை பறைசாற்றுவதே இச்சங்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும். ஜாவாவின் குடிமைப் பணியாளர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கிய அமைப்பான இது ஒரு கலாச்சார அமைப்பாக மாறியது. ஆனால் சற்று காலத்தில் போய்டி ஓடோமா செயலிழந்த நிலை ஏற்படவே, சரேகத் இஸ்லாம் (Sarekat Islam என்னும் முஸ்லிம் கூட்டியக்கம்) என்ற செல்வாக்குப் பெற்ற அரசியல் சமூக அமைப்பு தோன்றியது.

சீனர்களின் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்க்கவே சரேகத் இஸ்லாம் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் படிப்படியாக அது ஒரு சோஷலிச மற்றும் தேசியவாத அமைப்பாக உருக்கொண்டது. 1916இல் சுயாட்சிக்கான தீர்மானத்தை அது நிறைவேற்றியது. இரண்டு ஆண்டுகளில் அதன் உறுப்பினர் எண்ணிக்கை 3,50,000 என்ற நிலையிலிருந்து இரண்டரை மில்லியனாக வளர்ந்தது. ரஷ்யப் புரட்சி 1917இல் ஏற்படுத்திய தாக்கத்தில் சரேகத் இஸ்லாம் அமைப்பினுள் இருந்தப் பொதுவுடைமைவாதிகள் அமைப்பை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு செல்ல முயன்றார்கள். அம்முயற்சி தோற்றதால் அவர்கள் சரேகத் இஸ்லாமை விட்டு வெளியேறி 1919ஆம் ஆண்டு இந்தோனேஷிய பொதுவுடைமை கட்சியை உருவாக்கினர்.

### கட்சி அரசியல்

ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் விதமாக அதிகாரப்பரவல் சட்டம் (Decentralisation Law) 1903இல் இயற்றப்பட்டது. அதனடிப்படையில் மாகாண சபைகள் (Provincial Councils) அடுத்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவ்வரசில் இந்தோனேஷியர்கள் எந்தப் பங்கும் ஆற்றவில்லை. தேசியவாதிகளின் எதிர்ப்பால் டச்சு அரசு வோக்ஸ்ராட் (Volksraad, 1918) என்னும் மக்களின் பாராளுமன்றத்தை வெல்டெவ்ரெடன், படாவியா (ஜகார்தா), ஜாவா ஆகிய இடங்களில் ஏற்படுத்தியது, அவை 1942ஆம் ஆண்டு வரை செயலாற்றின.

1920களின் போது பொதுவுடைமைவாதிகளும் சரேகத் இஸ்லாம் அமைப்பும் தேசிய இயக்கத்தில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்ற நிலையில் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். தலைமைத்துவத்திற்கான இப்போட்டியில் பொதுவுடைமைவாதிகளே வெற்றிபெற்றனர். அவர்கள் 1926–27ஆம் ஆண்டுகளில் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கு ஜாவா மற்றும் சுமத்ராவில் பெரும் கிளர்ச்சியாக உருவெடுத்தது. உடனடியாக அடக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டதால் இது பொதுவுடைமைவாதிகளுக்கு தற்காலிகமான ஒரு பின்னடைவாகவே இருந்தது.


சுகர்னோ

ஏறக்குறைய இதன் சமகாலத்தில் சுகர்னோ என்ற இளம் பொறியாளர் இந்தோனேஷிய தேசிய கட்சியை நிறுவினார். நாட்டில் உதித்த இந்த மூன்றாவது அணி, மேற்கத்திய வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த மதச்சார்பற்ற வர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டது. ஆனால் 1931ஆம் ஆண்டு காவல்துறை இதன் தலைமை அலுவலகத்தை சோதனைக்குட்படுத்தியது. சுகர்னோ கைது செய்யப்பட்டு அவரது கட்சியும் கலைக்கப்பட்டது.

### டச்சு ஒடுக்குமுறையும் ஜப்பானிய ஆக்கிரமிப்பும்

1930களில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையை அடுத்து வேலையின்மை, ஊதிய குறைப்பு மற்றும் அதிகரித்த ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக எழுந்த தேசியவாதத்தை தடுக்க அரசாங்கம் அடக்குமுறை மற்றும் பத்திரிகை தணிக்கைக்கு முயன்றது. சுகர்னோவும் பிற தேசியவாத தலைவர்களும் 1942ஆம் ஆண்டு வரை சிறையில் வாடினர். கிழக்கிந்திய தீவுகளில் 1942 மார்ச்சில் டச்சுக்காரர்கள் ஜப்பானியர்களிடம் சரணடைந்தார்கள். ஜப்பானியர்களை எதிர்த்த சிலர் இரகசிய எதிர்ப்பு அமைப்புகளை ஒருங்கிணைக்க முற்பட்டார்கள். இதற்கு மாறாக



12th_History_TM_Unit_14_V2.indd 144 24-09-2019 10:58:20

சுகர்னோ, ஹட்டா போன்ற தலைவர்களால் வழிநடத்தப்பட்ட சிலர் விடுதலை அடைய சிறந்த வழி ஜப்பானியர்களை ஆதரிப்பதே என்று கருதினார்கள். இறுதிகட்டப்போரில் ஜப்பானியர்கள் விடுதலை வழங்குவதற்குரிய விதிமுறைகள் குறித்து இந்தோனேஷிய தலைவர்களுடன் பேச முடிவெடுத்தனர்.

### விடுதலை அடைதல்

ஜப்பானியர்கள் வெளியேற்றப்பட்ட பின், போட்ஸ்டாம் மாநாட்டு முடிவின்படி 1945 செப்டம்பரில் பிரிட்டிஷ் படைகள் கிழக்கிந்திய தீவுகளில் வந்திறங்கின. அவர்கள் பெரும்பாலும் டச்சுக்காரர்களை உள்ளடக்கிய 2,00,000 போர் கைதிகளை விடுவித்தனர். சுகர்னோவின் ஆட்சி நிலவிய ஜாவா, சுமத்ரா நீங்கலாக கிழக்கிந்திய தீவுகளின் பிற பகுதிகளை டச்சுக்காரர்கள் மறுஆக்கிரமிப்பு செய்தனர். டச்சுக்காரர்கள் சுகர்னோவின் ஆட்சியை அங்கீகரிக்க மறுத்தனர். அவரோ குடியரசுத் தலைவர் பதவியைத் துறக்க முன்வரவில்லை. இதனால் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புப் படைகள் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்த முயற்சி மேற்கொண்டதன் விளைவாக டச்சு–இந்தோனேஷிய ஒப்பந்தம் உருவானது. இதன் விளைவாக, ஜாவா மற்றும் சுமத்ராவை விடுதலை பெற்ற குடியரசாக டச்சுக்காரர்கள் ஏற்றுக்கொண்டதோடு, பிற தீவுகளை கூட்டாட்சி முறையில் இணைத்து இந்தோனேஷிய ஐக்கிய நாடு உருவாக்கப்பட்டது. எனினும் டச்சுக்காரர்கள் இருமுறை இந்தோனேஷியாவின் அமைதியைத் தகர்க்க முயன்றனர், ஆனால் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் வெளிவந்த உலக கருத்தோட்டமும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவும் கொடுத்த அழுத்தம் காரணமாகவும் 1949ஆம் ஆண்டின் இறுதியில் இந்தோனேஷியாவிற்கு சாதகமான தீர்வு வழங்கப்பட்டது. தி ஹேக்கில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் விடுதலை பெற்ற இந்தோனேஷியாவின் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1949 டிசம்பரில் இந்தோனேஷியா விடுதலைபெற்ற நாடானது.



அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

## பிலிப்பைன்ஸ்

மன்னர் ஐந்தாம் சார்லஸின் மகனான ஸ்பானிய இளவரசர் பிலிப்பின் பெயர் சூட்டப்பட்ட ஏறக்குறைய 7,000 தீவுகளின் கூட்டமே பிலிப்பைன்ஸ் ஆகும். கிழக்கிந்திய தீவுகள் போன்றே பிலிப்பைன்ஸிலும் பதினாறாம் நூற்றாண்டில் இருந்தே ஐரோப்பியரது ஆட்சி நடைபெற்று வந்தது. மிகுவெல் லோப்பஸ் டெ லெகாஸ்பின் (Miguel Lopez de Legazpiin) 1565 பிப்ரவரி மாதத்தில் கால்பதித்தது முதற்கொண்டே இங்கு ஸ்பானிய காலனிய ஆட்சி துவங்கிவிட்டது. இதைத் தொடர்ந்து ஸ்பானியர்கள் 300 ஆண்டுகள் ஆட்சிசெலுத்தி தங்களின் மொழி, கலாச்சாரம், சமயம் போன்றவற்றை உள்நாட்டு மக்கள் மீது திணித்தனர். தேசியவுணர்வு பிலிப்பைன்ஸ்வாசிகளிடம் பிற பகுதிகளில் தோன்றுவதற்கு முன்பே தோன்றியது. கவைட் (Cavite) ஆயுதக்கிடங்கில் (1872 ஜனவரி 20இல்) 200 பிலிப்பினோ துருப்புகள் மற்றும் ஊழியர்கள் நடத்திய கவைட் கிளர்ச்சியை காட்டுமிராண்டித்தனமாகக் கையாண்ட செயலானது தேசியவுணர்வை வளர்த்தெடுக்க பெரிதும் உதவியது. பிலிப்பைன்ஸ் நாட்டின் அறிவார்ந்த மக்கள் கைது செய்யப்பட்டு குறுகியகால விசாரணைக்குப் பின்னர் மூன்று குருக்கள் (ஜோஸ் பர்கோஸ், ஜசின்டோ சமோரா மற்றும் மரியானோ கோமஸ் ஆகியோர்) பொதுவெளியில் தூக்கிலிடப்பட்டு தியாகிகளானார்கள்.



ஸ்பானிய–அமெரிக்கப் போர்

கியூபா மீதான அமெரிக்காவின் ஆர்வத்தால் எழுந்த அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்கும் இடையிலான சர்ச்சை ஸ்பானிய–அமெரிக்கப் போருக்கு வழிவகுத்தது. உள்நாட்டில் அழுத்தம் அதிகரித்துக் கொண்டிருந்ததால் கியூபாவிற்கு குறைந்தபட்ச உள்ளாட்சி அதிகாரத்தை வழங்க ஸ்பெயின் ஏற்கனவே முடிவுசெய்திருந்தது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் காங்கிரஸ் கியூபாவில் நிறுத்தப்பட்டிருந்த ஸ்பெயினின் ஆயுதப்படைகளை உடனடியாக திரும்பப்பெற வற்புறுத்தியது. மேலும் காங்கிரஸ் ஆயுதப்படைகளை திரும்பப்பெறும்



12th_History_TM_Unit_14_V2.indd 145 24-09-2019 10:58:20

நடவடிக்கையை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு படைபலத்தை பிரயோகிக்கவும் தனது நாட்டிற்கு அதிகாரம் வழங்கியிருந்தது. ஸ்பெயின் இழுத்தடித்துக் கொண்டிருந்ததால் 1898 ஏப்ரல் 25இல் அமெரிக்க நாடு போர் அறிவிப்பு செய்தது. தூரத்தில் வீற்றிருக்கும் வலுவான எதிரியான அமெரிக்காவை எதிர்கொள்ள ஸ்பெயின் தனது இராணுவத்தையோ, கடற்படையையோ தயார் நிலையில் வைத்திருக்கவில்லை. ஆகவே அமெரிக்கா எளிமையாக வென்றது. ஸ்பெயின் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் (1898 டிசம்பர் 10இல் கையெழுத்திடப்பட்டது) கியூபா மீது கொண்டிருந்த அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத்ததோடு குவாமையும், போர்டோரிக்கோவையும் அமெரிக்காவிற்கு தாரைவார்த்தது மேலும் பிலிப்பைன்சின் மீது கொண்டிருந்த இறையாண்மையையும் ஸ்பெயின் விட்டுக்கொடுத்தது.

அகுயினால்டோவும், பிற கவைட் தலைவர்களும் ஸ்பானியப் படைகளை எதிர்த்துப் பல போர்களிலும் சிறப்பான வெற்றிகளை அடைந்து ஸ்பானியர்களை விரட்டியடித்திருந்தனர். அகுயினால்டோ 1898 மே 28இல் 18,000 துருப்புக்களை கொண்டபடை ஒன்றை திரட்டி சிறிய ஸ்பானிய காவற்படையை எதிர்த்து அலபன், இமுஸ், கவைட் போன்ற பகுதிகளில் சண்டையிட்டார். அலபனின் வெற்றிக்குப் பின்னர் முதன்முறையாக கவைட் நூவோவில் (Cavite Nuevo என்னும் தற்கால கவைட் நகரம்) அமைந்த டிட்ரோ கவைட் டெனோ (Teatro Caviteno) என்னும் இடத்தில் 300 கைது செய்யப்பட்ட ஸ்பானிய துருப்புக்களின் முன்பும் பிலிப்பினோ புரட்சியாளர்களின் முன்பும் பிலிப்பைன்சின் கொடியை எமிலியோ அகுயினால்டோ பறக்கவிட்டார். மலோலோஸ் அரசியல்சாசன பிரகடனத்தை அறிவித்து எமிலியோ அகுயினால்டோ புதிய குடியரசின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எமிலியோ அகுயினால்டோ 1901 மார்ச் 23இல் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்படும் வரை முதல் குடியரசு தாக்குப்பிடித்து பின் கலைக்கப்பட்டது.



எமிலியோ அகுயினால்டோ

பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசியவாதிகள் கியூபா மட்டுமே அமெரிக்காவிற்கு சர்ச்சைக்குரிய பகுதி என்ற எண்ணம் கொண்டிருந்தனர். ஆனால் குறுகிய காலத்திலேயே அவர்கள் ஒரு தலைமைக்கு மாற்றாக மற்றொரு தலைமையின் கீழ் தங்கள் தேசம் கொண்டு செல்லப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டார்கள். ஸ்பானிய–அமெரிக்கப் போரால் வெறுப்படைந்திருந்த அவர்கள் கொரில்லா போர் முறையை கைக்கொள்ளலானார்கள். பிலிப்பைன்சின் தேசியவாதிகள் அமெரிக்க அரசிற்கு கொடுத்த எதிர்ப்பிற்கு அந்நாட்டில் போதுமான அளவு ஆதரவுப் பரப்புரையாளர்கள் இருந்தமையால் அவ்வரசு பிலிப்பைன்ஸில் பிரதிநிதித்துவ அமைப்புகளை விரைந்து ஏற்படுத்த முனைந்தது. அமெரிக்க ஆட்சியின் ஆரம்பத்தில் (1902) முதன்மையான காலனிய நிறுவனங்கள் யாவும் தோற்றுவிக்கப்பட்டன: ஆங்கில வழி கல்வி முறை, தேர்வுகள் அடிப்படையில் குடிமைப்பணி, மாகாண நீதிமன்றங்களை உள்ளடக்கிய நீதித்துறையை உருவாக்கல், தேர்தல் மூலம் நகராட்சி மற்றும் மாகாண அரசுகளை நிறுவுதல் இறுதியாக தேசிய அவைக்கு தேர்தல்கள் நடத்தி தேர்ந்தெடுத்தல் போன்றவைகள் அதில் உள்ளடங்கும். 80 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அவைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசியவாத கட்சியே பெரும்பான்மை பெற்றது.

தேசியவாத கட்சி சுயாட்சியைத் தொடர்ந்து கோரியது. அக்கட்சியின் தலைவரான குவிசோன் கூறுகையில், 'பிறரின் ஆட்சி சொர்க்கமாகவே இருந்தால் கூட அதைவிட நரகமேயானாலும் எங்களை நாங்களே நிர்வகிக்க விரும்புகிறோம்' என்றார். பொருளாதாரப் பெருமந்த காலமான 1930களில் இடதுசாரிகளின் தொடர் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் (PKP என்று சுருக்கமாக குறிப்பிடப்படும் Partido Komunista ng Pilipinas என்னும் இடதுசாரி கட்சி) என்ற 1930களில் உருவாக்கப்பட்ட கட்சியை அமெரிக்க ஐக்கிய நாட்டின் காலனிய அதிகாரிகள் சட்டத்திற்குப் புறம்பானதென்று தடைசெய்தார்கள். இருப்பினும் பொதுவுடைமைவாதிகள் அமெரிக்க ஐக்கிய நாட்டை, உள்நாட்டில் சுயாட்சி ஏற்படுத்த இணங்கச் செய்தார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டினருக்கு பத்தாண்டுகளில் அதிகாரத்தை வழங்க 1934ஆம் ஆண்டு இயற்றப்பட்ட டைடிங்ஸ்–மெக்டஃப்பி சட்டம் (Tydings–McDuffie Act என்னும் பிலிப்பைன்ஸ் சுதந்திர சட்டம்) வழியேற்படுத்தியது. இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு பிலிப்பைன்ஸில் தனது இராணுவத்தளத்தை பராமரித்துக் கொள்ளவும், வெளியுறவுக் கொள்கைகளை



12th_History_TM_Unit_14_V2.indd 146 24-09-2019 10:58:20

**பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸும் (பிலிப்பைன்ஸ் பொதுவுடைமை கட்சி) ஹக் கிளர்ச்சியும்:** அமெரிக்க அரசால் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் அமைப்பு சட்டத்திற்கு புறம்பானது என ஆரம்பத்தில் தடைவிதிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அது சட்டரீதியான அங்கீகாரம் பெற்று ஜப்பானிய ஆதிக்கத்தை எதிர்த்த மக்களின் படை எனப்படும் ஹக்பாலாஹப்பின் தலைமைப் பொறுப்பை தக்கவைத்துக் கொண்டது. ஹக்பாலாஹப் ஒரு வலுவான கொரில்லா அமைப்பாக உருவான காலகட்டத்தில் மறு–ஆக்கிரமிப்பை முடித்து திரும்பிக் கொண்டிருந்த அமெரிக்கப்படைகள் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸின் உறுப்பினர்களையும், ஹக் என்றழைக்கப்பட்ட பொதுவுடைமைவாத விவசாயிகளையும் அவர்கள் போர்க்காலத்தில் தோழர்கள் என கருதியவர்களே தாக்கினார்கள். அரசின் படைகளால் ஹக்குகளின் பகுதிகள் தாக்குதலுக்கு உள்ளானதால் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் கொரில்லா போர் முறையை கையாண்டது. ஆரம்பத்தில் அதை தற்காப்பு அடிப்படையில் மட்டுமே கைக்கொண்டார்கள். ஆனால் 1950 முதல் அக்கட்சி அதிகாரத்தை பெறும் உத்தியாக அதைப் பயன்படுத்திக் கொண்டது. எனினும் 1950களின் மத்தியில் பிலிப்பைன்ஸ் அரசு அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவைப் பெற்று "ஹக் கிளர்ச்சியை" ஒடுக்கியது.



கியூ சோன்

கட்டுப்படுத்தவும் முடியும் என்றிருந்தது. இச்சட்டம் அடுத்த ஆண்டு (1935) பொதுவாக்கெடுப்பின் மூலமாக ஒப்புதலுக்குட்படவும் இருந்தது. குவிசோன் 1935 முதல் 1941 வரை குடியரசு தலைவராக பொறுப்புவகித்தார். பேர்ல் ஹார்பரை தாக்கியவுடன் ஜப்பான் பிலிப்பைன்ஸையும் தாக்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் பிலிப்பைன்ஸ் மீது ஜப்பான் போர் தொடுத்தமையே மோசமான இராணுவ தோல்வியாக கருதப்படுகிறது. கொல்லப்பட்ட 1,00,000 நபர்களில் 23,000 பேர்கள் அமெரிக்க இராணுவப் பணியாளர்கள் என்பதோடு எஞ்சியோர் பிலிப்பைன்ஸ் நாட்டினர் ஆவர்.



பிலிப்பைன்சின் விடுதலை

ஜப்பானியர்களின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வந்தவுடன், அமெரிக்க ஐக்கிய நாடு சட்டப்பூர்வமாக தான் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றியது. தேர்தல்கள் ஏப்ரல் 1946இல் நடத்தப்பட்டு 1946 ஜூலை 4இல் பிலிப்பைன்ஸ் விடுதலை பெற்ற நாடானது. பிலிப்பைன்சை விட்டு அகன்றாலும் அமெரிக்க ஐக்கிய நாடு 1946 முதல் 1954 வரையிலான காலத்தில் ஹக்குகளுக்கெதிராக இராணுவப் பயிற்சியும், நிதியுதவியும் நல்கி வந்தது. காலம் முழுவதும் பிலிப்பைன்ஸ் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நம்பிக்கையைப் பெற்ற நட்பு நாடாகவே இருந்துவந்துள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் 1954ஆம் ஆண்டு உருவான தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பில் (South East Asian Treaty Organisation – SEATO) அங்கம் வகிக்கும் மூன்று ஆசிய நாடுகளில் பிலிப்பைன்சும் ஒன்றாகும்.

## பாடச் சுருக்கம்

- வெர்செய்ல்ஸ் அமைதி ஒப்பந்தத்தின் நீதியற்ற தன்மை, பன்னாட்டு சங்கத்தின் தோல்வி, 1930களில் தோன்றிய பொருளாதாரப் பெருமந்தம், பாசிச சக்திகளான இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் போன்றவைகளின் விரிவாக்கக் கொள்கை இரண்டாம் உலகப்போரை விளைவித்தல் உள்ளிட்ட அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளது.
- பேர்ல் துறைமுகம் மீது ஜப்பான் நடத்திய தாக்குதல், ஸ்டாலின்கிராட் போரும், ட்ரெஸ்டன் குண்டுவீச்சும், ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டு வீசப்படுதல் போன்றவை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.
- அச்சு நாடுகள் மற்றும் அவர்தம் கூட்டு நாடுகளோடு ஏற்படுத்தப்பட்ட அமைதித் தீர்வுகள், ஐக்கிய நாட்டு சபையின் உருவாக்கம் மற்றும் போரின் மொத்த விளைவுகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.



12th_History_TM_Unit_14_V2.indd 147 24-09-2019 10:58:20

- சீன வேளாண்குடிகளின் துயரங்கள் மற்றும் மஞ்சுக்கள் கடைபிடித்த திறந்தவெளிக் கொள்கை அந்நாட்டை அயல்நாட்டு சக்திகளான பிரிட்டன், பிரான்ஸ் போன்றவை அவரவர் செல்வாக்கிற்கு உட்பட்ட கோளங்களாகப் பிரிக்க வழியேற்படுத்தியமை விளக்கப்பட்டுள்ளது.
- கிறித்தவ சமயத்தின் பரவல் பற்றியும், சீன நிர்வாகத்தில் வெளிநாட்டாரின் குறுக்கீடு குறித்தும், சீனப் பகுதிகளை ஜப்பானியர் ஆக்கிரமித்தவுடன் அங்கே ஊற்றெடுத்துப் பரவிய தேசியவுணர்வு புரட்சிக்கு வழிநடத்தி சென்றமை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- சன் யாட்–சென்னும், மா சே–துங்கும் சீன மக்களை மஞ்சு வம்சத்திற்கு எதிராக திரட்டி மக்களின் ஆட்சியை நிறுவியதில் ஆற்றியப் பங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
- மாவோவின் நீண்ட பயணமும், அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் சீனாவில் பொதுவுடைமை அரசு ஏற்பட வழிவகுத்தமை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
- இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் சுவடுகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.
- மூன்று வருடங்களுக்கு மேலாக ஜப்பானின் ஆக்கிரமிரப்பிற்கு உட்பட்ட இப்பகுதிகளில் தேசிய இயக்கம் பிறந்து இந்தோனேஷியாவிலும், பிலிப்பைன்சிலும் காலனிய ஆட்சி தூக்கிவீசப்பட்டமை எடுத்தியம்பப்பட்டுள்ளது.

## பயிற்சி

H2H9L2

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போர் உருவாக எது காரணமாக இருக்கவில்லை?
   (அ) ஜெர்மனியோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நீதியற்ற தன்மை
   (ஆ) பன்னாட்டு சங்கத்தின் தோல்வி
   (இ) 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்
   (ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள்

2. கெல்லாக்–பிரையாண்ட் ஒப்பந்தம் ________ ஆண்டில் கையெழுத்தானது.
   (அ) 1927 (ஆ) 1928 (இ) 1929 (ஈ) 1930

3. **கூற்று:** ஆயுதக்குறைப்பு மாநாடு பன்னாட்டு சங்கத்தால் ஜெனீவாவில் நடத்தப்பட்டது.
   **காரணம்:** பிரான்சுக்கு சமமாக ஜெர்மனி தளவாடங்களை கொண்டிருக்க முயல்வது பேச்சுவார்த்தைகளின் ஒரு முக்கிய அம்சமாக தோன்றியது.
   (அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
   (ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
   (இ) கூற்று சரி. காரணம் தவறு
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி

4. சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது?
   (அ) 1931 (ஆ) 1932 (இ) 1933 (ஈ) 1934

5. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஐரோப்பியக் கண்டத்திற்குள் தொழிற்துறையில் வலிமையான சக்தியாக ________ நாடு உருவாகியிருந்தது.
   (அ) பிரான்ஸ் (ஆ) ஸ்பெயின்
   (இ) ஜெர்மனி (ஈ) ஆஸ்திரியா

6. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளின்படி ஜனவரி 1935இல் ________ பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முடிவானது.
   (அ) சூடட்டன்லாந்து (ஆ) ரைன்லாந்து
   (இ) சார் (ஈ) அல்சேஸ்

7. **கூற்று:** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.
   **காரணம்:** அகழிப் போர்முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.
   (அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.



12th_History_TM_Unit_14_V2.indd 148 24-09-2019 10:58:20

8. ஜெர்மனி 1939இல் ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ________ நாட்டோடு ஏற்படுத்திக் கொண்டது.

(அ) ஆஸ்திரியா (ஆ) இத்தாலி
(இ) ரஷ்யா (ஈ) பிரிட்டன்

9. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ________ ஆவார்.

(அ) யாமமோடோ
(ஆ) ஸ்கூஸ்னிக்
(இ) இரண்டாம் கெய்சர் வில்லியம்
(ஈ) ஹிரோஹிடோ

10. குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கடன்–குத்தகை முறை ________ வகையில் உதவிபுரிந்தது.

(அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்
(ஆ) யூதர்களை ஹிட்லரின் படைகள் கட்டவிழ்த்துவிட்ட கொலைவெறித் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்
(இ) தோழமை நாடுகளின் வளங்களைப் பெருக்கி, அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் வழங்குதல்
(ஈ) இரண்டாம் உலகப்போரில் காயமடைந்தோருக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்

11. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழிநடத்தியவர் ________ ஆவார்.

(அ) மெக்ஆர்தர் (ஆ) ஐசன்ஹோவர்
(இ) ஜெனரல் டி கால் (ஈ) ஜார்ஜ் மார்ஷல்

12. ஜப்பானிய கடற்படையை அமெரிக்க ஐக்கிய நாட்டின் கடற்படை தோற்கடித்தமை ________ போரிலாகும்.

(அ) பிரிட்டன் (ஆ) குவாடல்கனல்
(இ) எல் அலாமின் (ஈ) மிட்வே

13. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது ________ என்னுமிடத்தில் ஆகும்.

(அ) போட்ஸ்டாம் (ஆ) எல் அலாமின்
(இ) ஸ்டாலின்கிராட் (ஈ) மிட்வே

14. கீழ்க்காண்பனவற்றுள் போட்ஸ்டாம் மாநாட்டின் அறிவிப்புகளில் அடங்காத ஒன்று எது?

(அ) கிழக்கு பிரஷ்யா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்: அதில் வடக்குப் பகுதி சோவியத் நாட்டையும், தென் பகுதி போலந்தையும் சென்று சேரும்.
(ஆ) முன்பு சுதந்திர நகரமாக இருந்த டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சேர்க்கப்படும்.
(இ) ஜெர்மனி நான்கு தொழில்மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் முறையே சோவியத் நாடு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், ஆகியவைகளின் கட்டுப்பாட்டில் விடப்படும்.
(ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பதென்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது.

15. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் சேராத ஒன்று எது?

(அ) இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவிலிருந்த பல முடியரசுகளுக்கு மரண அடி கொடுத்தது.
(ஆ) பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை உருவாக்கியது.
(இ) பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது.
(ஈ) அமெரிக்க ஐக்கிய நாடும், சோவியத் நாடும் இரு வல்லரசுகளாக உருவெடுத்தன.

16. கீழ் பொருத்தப்பட்டிருப்பவையில் சரியான இணைகள் எது?

(1) ஜெனரல் டி கால் – பிரான்ஸ்
(2) ஹேல் செலாஸி – எத்தியோப்பியா
(3) ஜெனரல் படோக்லியோ – ஜப்பான்
(4) அட்மிரல் யாம்மோடோ – இத்தாலி

(அ) (1) மற்றும் (2) (ஆ) (2) மற்றும் (3)
(இ) (3) மற்றும் (4) (ஈ) அனைத்தும்

17. பிரான்ஸ் இரண்டாம் அபினிப் போரில் பங்கெடுத்தது

(அ) பிரிட்டனுக்கு உதவிபுரிவதற்காக
(ஆ) பிரான்சுக்கென தனி செல்வாக்கின் கோளத்தை உருவாக்கிக் கொள்வதற்காக
(இ) சமய செயல்பாடுகளுக்கு அனுமதிகோரும் பொருட்டு
(ஈ) ஓபிய வணிகத்தில் ஈடுபடும் உரிமையை பிரான்ஸ் நாட்டினர் நிலைநாட்டுவதற்காக

18. மஞ்சு வம்சத்தின் காலம் ________ ஆண்டு வரை நீடித்தது.

(அ) 1908 (ஆ) 1911 (இ) 1912 (ஈ) 1916



12th_History_TM_Unit_14_V2.indd 149 24-09-2019 10:58:20

19. ஸ்பானிய–அமெரிக்கப் போர் ________ சர்ச்சையை முன்னிறுத்தி 1898ஆம் ஆண்டில் நடைபெற்றது.

(அ) கியூபா (ஆ) பிலிப்பைன்ஸ்

(இ) போர்ட்டோ ரிக்கோ (ஈ) படாவியா

20. **கூற்று:** பிலிப்பைன்ஸ் 4 ஜூலை 1946ஆம் ஆண்டு விடுதலையடைந்தது.

**காரணம்:** அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழான தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்தது.

(அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

## II. சுருக்கமான விடையளிக்கவும்.

1. கெல்லாக்–பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.
2. பன்னாட்டு சங்கத்திலிருந்து 1933ஆம் ஆண்டில் ஜெர்மனி ஏன் வெளியேறியது?
3. ரோம்–பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?
4. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?
5. டங்கிர்க் வெளியேற்றம் குறித்து நீவீர் அறிவது யாது?
6. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எழுதுக.
7. அட்லாண்டிக் பட்டயத்தின் சிறப்புக் கூறுகளைப் பட்டியலிடுக.
8. நான்கிங் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை ஆய்க.
9. போய்டி ஓடோமா பற்றிய குறிப்பு வரைந்து அதன் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.
10. பிலிப்பைன்ஸில் 1902இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஆட்சியின் உடனடி விளைவுகள் யாவை?
11. டச்சு–இந்தோனேஷிய உடன்படிக்கையின் பின் நேர்ந்த முன்னேற்றங்களை விவாதத்திற்கு விவாதிக்க.
12. கவைட் கிளர்ச்சியின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

## III. குறுகிய விடையளிக்கவும்.

1. ஸ்டாலின்கிராடை ஆக்கிரமிப்பதற்கு ஹிட்லர் ஏன் அதிக அக்கறை கொண்டார்? அது அவரின் "வாட்டர்லூவாக" மாறிப்போனது எவ்வாறு என்பதனை சுட்டுக.
2. நேச நாடுகள் ஜெர்மனி மீது குண்டுவீசி தாக்கியது பயங்கர தாக்குதல் பிரச்சாரங்களுக்கு அடையாளமாக அமைந்தது – விளக்குக.
3. ஒரு ஏகாதிபத்திய சக்தியாக ஜப்பானின் திட்டங்கள் யாவை?
4. ஹுக் கிளர்ச்சியின் முக்கியத்துவம் யாது?
5. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
6. சீனாவில் நிகழ்ந்த பாக்ஸர் கிளர்ச்சி பற்றிய குறிப்புகளைத் தருக.
7. சீன தேசிய அரசியலில் கோமின்டாங் கட்சியின் பங்கை விவாதத்திற்கு உட்படுத்துக.
8. இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.

## IV. விரிவான விடையளிக்கவும்.

1. இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.
2. இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.
3. சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மா சே–துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக.
4. இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டாய்ந்து எழுதுக.

## V. செயல்பாடுகள்.

1. பேர்ல் ஹார்பர் (Pearl Harbour) மற்றும் ஃப்ரம் ஹியர் டு எடர்னிட்டி (From Here to Eternity) போன்ற திரைப்படங்களை மாணவர்கள் காண ஏற்பாடு செய்யலாம்.
2. "அமெரிக்க ஐக்கிய நாடு இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானின் மீது அணுகுண்டை வீசித் தாக்குவது நியாயமானதுதான் என நினைத்ததா?" – மாணவர்கள் விவாதிக்கலாம்.
3. உலக புறஎல்லை (World outline Map) வரைபடத்தில் இரண்டாம் உலகப்போரில் பங்கெடுத்த நாடுகள், போர் நடைபெற்ற முக்கியமான பகுதிகள் போன்றவற்றை குறிக்க ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டலாம்.
4. போர் தளபதிகளான யுவான் ஷி காய், மெக் ஆர்தர், ஜார்ஜ் மார்ஷல், படோக்லியோ போன்றவர்களின் வரலாற்றை மட்டுமல்லாது புரட்சிகர / தேசியவாத தலைவர்களான ஹங்க் ஹஸ்யு–சுவான், அகுயினால்டோ போன்றவர்களின் சரிதையையும் மாணவர்கள் அறிய முனையலாம்.



12th_History_TM_Unit_14_V2.indd 150 24-09-2019 10:58:20

## மேற்கோள் நூல்கள்


- H.A. Davies, *An Outline History of the World,* Oxford University Press, 2006.
- Edward McNall Burns, *Western Civilizations*, vol. 2, W.W. Norton, New York, 1972
- R.D. Cornwell, *World History in the Twentieth Century,* Longman, 1972.
- Richard Overy (ed.), *Complete History of the World*, Harper Collins, 2007
- Amry Vandebosch, "Nationalism in Netherlands East Indies," *Pacific Affairs*, vol.4, no. 12, 1931.
- Eric Hobsbawm, *Age of Extremes: The Short Twentieth Century 1914-1991,* Abacus, 1994.
- Chris Harman, A *People's history of the World*, Orient Longman, 2007.
- *Encyclopaedia Britannica*


## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| போரில் தோற்ற நாடு மற்றொரு நாட்டிற்கு அது ஏற்படுத்திய சேதத்திற்காக வழங்கும் இழப்பீட்டுத் தொகை | **reparation** | payments made by a defeated nation after a war to pay for damages it caused to another nation |
| இராணுவ ஆட்கள் மற்றும் ஆயுதக் குறைப்பு | **disarmament** | reduction of military forces and weapons |
| உடன்படிக்கையை மீறு | **breach** | go against the treaty, violate |
| சமாதானப்படுத்துதல் | **appeasement** | conciliation |
| ஓரிடத்திலிருந்து வெளியேற்றுதல் | **evacuation** | removing a person or persons from a place. |
| ஊக்கம் கொள்ளச் செய்தல், துணிவூட்டல் | **embolden** | give the courage to do something |
| சித்திரவதை முகாம் | **concentration camp** | a place where large numbers of people are kept as prisoners in extremely bad condition |
| பழிவாங்கும் இயல்புடைய | **vindictive** | revengeful |
| போரிடுகிற, மூர்க்கத்தனமான | **belligerent** | one eager to fight; aggressive |
| முன்னெப்போதுமில்லாத, முன் சம்பவிக்காத | **unprecedented** | never done, never known before |
| அடக்கு, ஒடுக்கு | **quell** | crush, suppress |
| போரில் தோற்றவர் மீது கோரப்படும் இழப்பீட்டுத் தொகை | **indemnity** | obligation of an individual or a nation to bear the losses of another incurred in a war. |
| கப்பல்/ விமானப் பணியாளர் குழு | **crew** | staff who work on board a ship or aircraft |
| நம்பிக்கைத் துரோகமாய் | **treacherously** | in a disloyal and faithless manner |
| வெளிப்பாடு | **manifestation** | appearance or demonstration |
| தளர்வடை, செயல் இழ | **languish** | to exist in an unpleasant condition |
| தவிர்க்க, தட்டிக்கழிக்கத் தந்திரம் செய்தல். | **dodge** | to trick to evade |
| விவாதத்தின்மூலம் இணங்கச் செய் | **persuade** | convince someone to do something through reasoning or argument. |
| பறிமுதல் செய்தல், கைப்பற்றுதல் | **seizure** | capture, takeover, annexation |



12th_History_TM_Unit_14_V2.indd 151 24-09-2019 10:58:21

## இணையச் செயல்பாடு

### இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

இந்த செயல்பாட்டின் மூலம் இரண்டாம் உலகப்போர் நிகழ்வுகளை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும்.





**படிநிலைகள்**

படி – 1: URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 : திரையில் தோன்றும் படத்தில் "Enter" ஐ சொடுக்கவும், பின்னர் கீழ்ப்பகுதியில் இருக்கும் காலக்கோட்டில் எதாவது ஒரு ஆண்டை தேர்வு செய்யவும் (உதாரணம்: 1939)


படி –3 : முதல் உலகப்போர் பற்றிய தகவல்களை ஒவ்வொன்றாக அறிய திரையில் தோன்றும் உலக வரைபடத்தில் ஏதாவது ஒரு படத்தொகுப்பை தேர்ந்தெடுக்கவும்.




படி 1




படி 2



படி 3

**உரலி:** https://www.abmc.gov/sites/default/files/interactive/interactive_files/WW2/index.html

QR GUIDE

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.



12th_History_TM_Unit_14_V2.indd 152 24-09-2019 10:58:22